

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பதினைந்தாவது அறிக்கை

" பள்ளிக்கல்வி "

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : - 8 AUG 2014)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பதினைந்தாவது அறிக்கை

" பள்ளிக்கல்வி "
குறித்த மதிப்பீடு தொடர்பான குழுவின் அறிக்கை

பொருளடக்கம்

		பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	i
முன்னுரை	...	iii

பாகம் – 1 அறிக்கை

I	முகவுரை	...	1
II	மாணவர் நிகர சேர்க்கை வீதம்	...	1–2
III	கல்விசார் மேலாண்மைத் திட்டம்	...	2–5
IV	கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களில் புதிய பள்ளிகளை துவங்குதல்	...	5–6
V	மாநில அரசால் மாணவர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்டங்கள்	...	6–8
VI	உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட நூலக தீர்வை குறித்த விவரங்கள்	...	9
VII	அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தல்/ மாணவியர் விடுதிகள் அமைத்தல்/ மாதிரி பள்ளிகளை ஏற்படுத்துதல்	...	9–11
VIII	நடமாடும் ஆலோசனை மையங்கள் அமைத்தல்	...	11
IX	கிராமப்புறக் குழந்தைகளின் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துதல்	...	11–12
X	நடுநிலைப் பள்ளிகளில் கணிதம் கற்கும் திறனை வலுப்படுத்துதல்	...	12–13
XI	குறுஞ்செய்தி மூலம் ஆசிரியர்களின் வருகையினை கண்காணித்தல்	...	13
XII	இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை	...	13–14
XIII	அனைத்து பள்ளிகளிலும் அன்னையர் பள்ளி பார்வைக் குழுக்கள் அமைத்தல்	...	14–15
XIV	கல்வியின் தரத்தை மேலும் உயர்த்த துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு	...	15–16
XV	2013–2014 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்	...	16
XVI	2013–2014 ஆம் ஆண்டில் பகுதி-II உட்கூறு–2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்	...	17
XVII	பள்ளிகளில் சதுரங்க விளையாட்டை அறிமுகப்படுத்துதல்	...	17
XVIII	பள்ளி நேரங்களில் அரசு பேருந்து சேவையினை முறைப்படுத்துதல்	...	18

XIX	முப்பருவ முறையுடன் கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை	...	18–20
XX	மெட்ரிகுலேசன் பள்ளிகளின் செயல்பாட்டை முறைப்படுத்துவதற்கு ஒரு உயர்மட்ட குழு அமைத்தல்	...	20–21
XXI	பள்ளி வாகனங்களில் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு	...	21–22
XXII	பள்ளிகளில் உள்ள நீச்சல் குளங்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள் உருவாக்குதல்	...	22
XXIII	பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில் நுட்பத் திட்டம்	...	22
XIV	மாணவர்களிடையே காணப்படும் பார்வை குறைபாடுகளை பரிசோதனை செய்தல்	...	23
XXV	மாநில ஆதார வள மையத்தின் செயல்பாடு	...	23–24
XXVI	மழலையர் திட்டத்தின் தரம் உயர்த்தப்பட்ட அங்கன்வாடி மையங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை	...	24–25
XXVII	இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ மாணவியர் மத்தியில் உடல் நலம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்	...	25
XXVIII	தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கான கல்வி கட்டணத்தை ஒழுங்குபடுத்தல்	...	26
XXIX	2013–2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்பு வசதிகள்	...	26
XXX	மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு பயிற்சி	...	26–27
XXXI	மாநில மற்றும் மத்திய அரசுகளினால் அமைக்கப்படும் அறிவுசார் பள்ளிகள்	...	27
XXXII	குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 ன் கீழ் வரையறுக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு அருகே பள்ளிகள் அமைத்தல்	...	28–29
XXXIII	2013–2014 நிதியாண்டில் தொடக்கப்பள்ளிகளை துவங்குதல்	...	29–30
XXXIV	அரசு உதவி பெறும் பள்ளிகளின் நிருவாகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அப்பள்ளிகளை அரசே ஏற்று நடத்துதல்	...	30–32
XXXV	தேசிய கல்வி வாரிய பள்ளிக்கு இணையாக தமிழக பள்ளிகளை கொண்டுவருதல்	...	32
XXXVI	தொழில் கல்விக்கான உயர்மட்டக்குழு அறிக்கையின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட தொழில் கல்வி பிரிவுகள்	...	32–33
XXXVII	அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை	...	33–34
XXXVIII	தாம் உயர்த்தப்பட்ட உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை ஏற்படுத்துதல்	...	34

XXXIX	புவியியல் தகவல் முறைமையை துறைபால் செயல்படுத்துதல்	...	34–35
XL	அடிப்படை வரைப்படம் உருவாக்குல்	....	35–37
XLI	பள்ளிச்செல்லா குழந்தைகளை இணையதள வாயிலாக கண்காணித்தல்	....	38
XLII	நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு அருகாமையிலுள்ள பள்ளிகளில் தொடக்க நிலையில் சேர்க்கை	....	39–40
XLIII	பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு	....	40–41
XLIV	கணினி உதவியுடன் கற்பதற்கான மொழி ஆய்வகம் அமைத்தல்	....	41–42
XLV	குழு, ஆய்வுப் பயணம் மேற்கொண்ட மாவட்டங்களில் நடைபெறும் பணிகள்	....	42–43

பாகம் – 2

நிகழ்ச்சி பகுதி 45–59

இணைப்பு–I	கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் புதிய பள்ளிகளை துவங்குதல்	...	61–63
இணைப்பு–II	உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட நூலக தீர்வை குறித்த விவரங்கள்	...	64–65
	பரிந்தரைகளின் சுருக்கம்	...	66–68
	குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	...	69

TRUTH ALONE TRIUMPHS

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2013–2014)

(2013–ஆம் ஆண்டு மே திங்கள் 16–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் (அலுவல் காரணமாக)

3. $ திரு. ச. இராமச்சந்திரன்
தலைவர், பொதுக்கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
@திரு. பி.வி. கதிரவன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. பி.ஜி. நாராயணன்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திருமதி த. இந்திராகாந்தி
6. திரு. செ. காமராஜ்
7. டாக்டர் க. கிருஷ்ணசாமி
8. திரு. சு. குணசேகரன்
9. திரு. அர. சக்கரபாணி
10. திரு. ஆர். சாமி
11. திரு. ஆர். சீனிவாசன்
12. திரு. தங்கதமிழ்செல்வன்
13. திரு. ப. தன்சிங்
14. திரு. வ. நீலகண்டன்
15. திரு. ச. பழனிச்சாமி
16. திரு. எஸ்.ஆர். பார்த்திபன்
17. செல்வி கே. பாலபாரதி
18. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
19. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திரு. இரா. பழனிசாமி . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

$ 9.12.2013 ஆம் நாள் வரை
@ 26.5.2014 ஆம் நாள் முதல்

முன்னுரை

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு **16.5.2013**–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர், பொது கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐந்து மதிப்பீடுகளில், " பள்ளிக்கல்வி " மதிப்பீடும் ஒன்றாகும். **"பள்ளிக்கல்வி"** குறித்த மதிப்பீட்டை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தேனி, திண்டுக்கல், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 11 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. **3.7.2014** அன்று சென்னையில், பள்ளிக்கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், மாநில திட்ட இயக்குநர் மற்றும் பள்ளிக்கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு **4.8.2014** அன்று குழு ஒப்புதல் அளித்தது. " பள்ளிக்கல்வி " குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், " பள்ளிக்கல்வி " குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

" பள்ளிக்கல்வி " தொடர்பான மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த பள்ளிக்கல்வித் துறை அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் (Bold) அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: **4.8.2014**,
ஆடி 19,
திருவள்ளுவர் ஆண்டு – 2045.

அ.பாப்பாசுந்தரம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

"பள்ளிக் கல்வி" குறித்த அறிக்கை

I. முகவுரை

1. கல்வி என்பது மனித வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தரமான கல்வி, குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்திய பின்னர் பள்ளிகளில் அதிக அளவில் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுள்ளது. பெண் குழந்தைகள், பள்ளிசேரா குழந்தைகள், மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், சமூக பாலின வேறுபாடுகளை களைதல் போன்ற செயல்பாடுகள் நல்ல பலன் அளித்துள்ளது. முப்பருவ முறையுடன் கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்தியதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது. புவியியல் தகவல் வரைபடத்தின் மூலம் ஒவ்வொரு பள்ளியின் அமைவிடம் அதன் அட்ச, தீர்க்க ரேகைகளுடனும், பள்ளியில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், சாலை இணைப்பு, இரயில் இணைப்பு போன்ற விவரங்கள் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

II. மாணவர் நிகர சேர்க்கை வீதம் (Net Enrolment Rate)

2. தரமான கல்வியினை குழந்தைகளுக்கு வழங்க அதிக அளவில் மாணவர் சேர்க்கை குறிப்பாக பெண் குழந்தைகள், பள்ளிசேரா குழந்தைகள், மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல் மற்றும் சமூக பாலின வேறுபாடுகளை களைதல் ஆகியவற்றை நிறைவேற்ற துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

3. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம், 2009–ன்படி 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்க பல்வேறு நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், 2012–2013 ஆம் ஆண்டை விட 2013–2014 ஆம் ஆண்டில் 89,687 மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளது என்றும், 2005–2006 ஆம் ஆண்டில் 5.74 இலட்சமாக இருந்த பள்ளிசேரா குழந்தைகளின் எண்ணிக்கை 51,447 ஆக குறைந்துள்ளது என்றும், பள்ளிசேரா குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்க ரூ.1688.44 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது என்றும், தொடக்க நிலையில் மாணவர் நிகர சேர்க்கை வீதம் (Net Enrolment rate) 99.69–லிருந்து 99.80–ஆகவும், நடுநிலையில் மாணவர் நிகர சேர்க்கை வீதம் (Net Enrolment rate) 99.00–லிருந்து 99.10–ஆகவும் அதிகரித்துள்ளது என்றும், இடைநிற்றல் வீதம் குறைந்து பள்ளி நிறைவு செய்பவர் வீதம் (Completion Rate) உயர்ந்துள்ளது என்றும், தொடக்க நிலையில் 2001–2002–ஆம் ஆண்டில் 12 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் தற்போது 0.95 விழுக்காடாக உள்ளது என்றும், நடுநிலையில் 2001–2002–ல் 13 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் தற்போது 1.65 விழுக்காடாக உள்ளது என்றும், தொடக்க நிலையில் 2012–2013–ல் 97.73 என இருந்த நிறைவு வீதம் (Completion Rate) 2013–2014–ஆம் கல்வியாண்டில் 97.93 ஆக அதிகரித்துள்ளது என்றும், நடுநிலையில் 2012–2013–ல் 93.83 என இருந்த நிறைவு வீதம் (Completion Rate) 2013–2014–ஆம் கல்வியாண்டில் 95.02 ஆக அதிகரித்துள்ளது என்றும் துறை தெரிவித்தது.

4. மேலும், குழந்தைகளின் சேர்க்கையை அதிகரிப்பதற்காக கடலூர், தருமபுரி, ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 45 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் 61 கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்தியாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன என்றும், 2013–2014–ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு ரூ.1452.275 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், 2013–2014 ஆம் கல்வியாண்டில் கல்வி பயிலும் மாணவர்களின் பாலின இடைவெளி (Gender Gap) குறைந்துள்ளது என்றும், தொடக்கநிலை வகுப்புகளில் மொத்த சேர்க்கையில் 51.35 விழுக்காடு மாணவர்களும், 48.65 விழுக்காடு மாணவிகளும் கல்வி பயில்கின்றனர் என்றும், நடுநிலை வகுப்புகளில் 51.31 விழுக்காடு மாணவர்களும், 48.69 விழுக்காடு மாணவிகளும் கல்வி பயில்கின்றனர் என்றும், துறையின் தொடர் நடவடிக்கையினால் பாலின இடைவெளி மேலும் குறைவதற்கு வாய்ப்புள்ளது என்றும் துறை தெரிவித்தது.

5. துறை தெரிவித்த தகவலுக்கு குழு, துறையின் தொடர் முயற்சியினால் வெற்றி இலக்கான நூறு சதவீதத்தை அடையமுடியும் என குழு தனது கருத்தினை தெரிவித்தது.

6. எனவே, துறை நூறு விழுக்காடு என்கிற இலக்கினை அடைய தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

III. கல்வி சார் மேலாண்மை தகவல் முறைமை திட்டம்

7. கல்வி சார் மேலாண்மை திட்டத்தினை (EMIS) செயல்படுத்த துறையால் இந்த கல்வியாண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

8. கல்வி சார் மேலாண்மை திட்டத்தினை (EMIS) செயல்படுத்தும் விதமாக 2012–2013 ஆம் ஆண்டிற்கான 56,573 பள்ளிகள், 1.35 கோடி மாணவர்கள் மற்றும் 3.20 இலட்சம் ஆசிரியர்கள் குறித்த விவரங்கள் பள்ளிகள் வாரியாக தகுந்த படிவங்களில் பெறப்பட்டு, கல்வி சார் இணையதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கல்வி சார் மேலாண்மை (State EMIS Cell) திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தும் பொருட்டு மாநில அளவில் தனி அலகு நிறுவப்பட்டுள்ளது என்றும், ஒருங்கிணைத்தல் மற்றும் வழிகாட்டுதல் பணிகளை மேற்கொள்ள 10 கல்வி சார் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப தகுதிவாய்ந்த 15 பணியாளர்கள் மென்பொருள் சார்ந்த பணிகளுக்காகவும் 25 கணினிகள் மற்றும் குறும்பரப்பு வளை அமைப்பு (LAN) வசதிகளுடன் பள்ளிக்கல்வி இயக்கக வளாகத்தில் தனி கட்டடத்தில் இயங்கும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

9. அதன்படி, பள்ளிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் விவரங்களை புதிய மாற்றங்களுடன் (Up-to-date Information) நிரந்தரமாக பராமரிக்கும் பொருட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு சொந்தமாக நான்கு உயர்தர தலைமைக் கணினி (Server) வாங்கப்பட்டுள்ளது என்றும், இந்த தலைமைக் கணினி (Server) தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் (ELCOT) விவர தொகுப்பு மையத்தில் (TNSDC) வைத்து நிறுவப்பட்டு பராமரிக்கப்படுகிறது என்றும் துறை தெரிவித்தது.

10. இத்திட்டத்தினை துல்லியமாகவும், தரமானதாகவும், வெற்றிகரமாக செயல்படுத்த மாவட்ட மற்றும் வட்டார வள மைய அளவில் பணிகளை மேற்பார்வையிடவும், வழிகாட்டுதலுக்காவும் பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், கல்வி சார் மேலாண்மை முறை பயன்பாட்டிற்கான மென்பொருள் பணி (Software support) மற்றும் தலைமைக் கணினி (Server) நிலைப்படுத்தும் பணி (Server Configuration) பணிகள் அண்ணா பல்கலை கழக ஆராய்ச்சி மையத்திடம் (AU-KBC Research Centre) ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், 2012–13 ஆம் கல்வியாண்டில் பராமரிக்கப்படும் புள்ளி விவரங்கள் நடப்பு கல்வியாண்டிற்கு மாற்றம் செய்யும் விதமாக, முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு நீங்கலாக, பிற மாணவர்களின் புள்ளி விவரங்கள் தானாக இயங்கும் விதமாக (Auto Updating) குறைந்த கால அளவில் செய்யும் பொருட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

11. மேலும், கல்வி சார மேலாண்மை திட்டத்தின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் புதிய மாற்றங்களுடன் (Up-to-date information) நிரந்தரமாக காணும் வகையில் மேற்படி திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

12. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கல்விசார் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 5 பள்ளிகளில் துறை நிர்ணயித்த பணிகள் அனைத்தும் முடிவுற்றதா என்றும், இணையதளத்தில் அவ்விவரங்கள் காண இயலுமா என்றும் குழு அறிய விரும்பியது.

13. அதற்கு, துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கல்விசார் மேலாண்மைத் திட்டம் மூலம் 5 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, துறை நிர்ணயித்த பணிகள் அனைத்தும் முடிவுற்று, அவை இணையதளத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தது.

14. பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி துவங்கப்பட்ட திட்டம் என்பதால் துறை உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு பதிவு செய்யப்படும் விவரங்களை அவ்வப்போது கண்காணித்து உரிய மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

15. தமிழ்நாட்டில் கல்வி சார் மேலாண்மை திட்டத்தின் கீழ் ஆய்வு செய்து கடந்த மூன்று வருடங்களாக ஒவ்வொரு மாணவரின் தகவல்களை சேகரித்து அவ்வப்போது பதிவு செய்து, அதற்கான தகவல் தளம் (Data Base) தயார் செய்து பள்ளிக்கல்வித் துறையின் சொந்த வளைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது என்றும், ஒவ்வொரு மாணவர்களுடைய தகவல்களையும் தற்போது பதிவு செய்துகொண்டு வருவதாகவும், ஒரு கோடியே 35 இலட்சம் மாணவர்களுடைய தகவல்களை சேகரித்து கணினியில் பதிவு செய்து, தற்போது ஒவ்வொரு மாணவர் பற்றிய புள்ளி விவரங்களையும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்க இயலும் என்றும், குழந்தைகளின் பிறப்பு விவரங்களை காண வழிவகை செய்யப்பட்டு, அவற்றைத் தொகுத்து, கல்வி கற்காமல் இருக்கும் மாணவர்களுடைய தகவல்களை தற்போது அறிய முடிகிறது என்றும், துறையின் அரசு முதன்மைச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

16. துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்ததற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகைய முறையில் பதிவு செய்யப்பட்ட தகவல்களை மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறு குழு கோரியது.

17. துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்த கருத்திற்கு, குழு, முதன்மைச் செயலாளர் தெரிவித்தது போல் மாநில கல்விசார் மேலாண்மை தகவல் முறைமை வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது என்பதை குழு ஏற்றுக்கொள்கிறது என்றும், குழுவை பொறுத்தவரையில், மேற்படி திட்டம் முழுமையாக ஒவ்வொரு மாவட்டத்திலும் முழு அளவிற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை குழு அறிய விரும்பியது.

18. துறை உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து, மேல்நிலைப் பள்ளிகளுக்குச் செல்லும்போது மாணவர்களுடைய சேர்க்கை குறித்த விவரங்களை அறிக்கையாக அனுப்பிவைக்கப் பெறவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

19. மேற்படி வலைதளம் கல்விப் பாடபொருள் வழங்கும் இணையமாகவும் துறைகளுக்கிடையே தொடர்பினை அளிக்கும் விதமாக ஏற்கெனவே செயல்பட தொடங்கியுள்ளது என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வசதி மாணவர்களுக்கு எவ்வாறு பயனுள்ளதாக அமைகிறது என்றும், மேற்படி வலைதளத்தில் பள்ளிக்கல்வித் துறை தொடர்பான விவரங்கள் பெறலாம் என பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் எத்தகையான அறிவிப்பு துறையால் செய்யப்படுகிறது என்று குழு அறிய விரும்புகிறது.

20. கல்விப் பாடபொருள் வழங்கும் இணைய தளம் மாணவர்களின் முழுமையான கல்வித்திறன் வளர்ச்சிக்குத் தேவையான (Enhancing the potential and the capacity building of the children) பாடபொருள்கள் (E-Contents) மற்றும் ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் படைப்புகள் (Creative and best practices) மின்னணு (Digitalization) செய்யப்பட்டு முழுநேரமும் பதிவிறக்கம் செய்யும் விதமாக கல்விப் பாடபொருள் வழங்கும் இணையம் (Educational contents server (ECS) நிறுவப்பட்டுள்ளது என்றும், மேற்படி கல்விப் பாடபொருள் இணையதளத்தில் பாட விளக்கங்கள், வினாவங்கி, பாட சம்பந்தமான படங்கள், செயல் முறை விளக்கங்கள், செயல் முறை விளக்கங்கள் பரிசோத்னை (Self Test), ஆசிரியர்களுக்கு தேவையான குறிப்புகள் (References) மற்றும் இதர பயனுள்ள செய்தி குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்படவுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

21. மாணவர்கள் பயனடையும் விதமாக இணையதள பயிற்சி தேர்வு (On-line test) வசதியும் செய்யப்பட உள்ளது என்றும் துறை தெரிவித்தது.

22. பாடப் பொருள் இணையதளத்தை நவீனப்படுத்தும் பொருட்டு உலகத்தரம் (World Class) வாய்ந்த அனைத்து சிறந்த முறைகளையும் (best practices) தேர்ந்தெடுத்து ஒருங்கிணைப்பு செய்யப்பட்டவுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

23. பள்ளிக்கல்வித் துறையின் செயல்பாடுகளை துரிதப்படுத்தும் மற்றும் நவீனப்படுத்தும் விதமாக மாநிலக் கல்வி இயக்குநர்கள் மற்றும் இயக்குநரகங்களை சார்ந்த சார்நிலை அலுவலர்களுக்கு கல்வித் தகவல் மேலாண்மை முறை மூலம் மின்னணு தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி மின்னணு தொடர்பு அமைப்பின் முலம் துறையின் செயல்பாடுகள் துரிதப்படுத்தப்படுவதாலும் மற்றும் நவீனப் படுத்துவதாலும் திட்டத்தின் உள் பயனாளிகள் மற்றும் வெளி பயனாளிகள், அறிக்கைகள் மற்றும் விவரங்களை புதிய மாற்றங்களுடன் குறிப்பிட்ட கால அளவில் காணவும் மற்றும் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும் என்றும் இத்திட்டத்தின் மூலம் துறை செயலர் முதல் கடைநிலைப் பள்ளிகள் முடிய (Vertical and Horizontal) ஒரே நேரத்தில் (at one - go) தகவல் பரிமாற்றம் சாத்தியமாகும் என்றும் துறை தெரிவித்தது.

24. வலைதளத்தில் உள்ள தகவல் மற்றும் புள்ளிவிவர பரிமாற்றத்தினை மேம்படுத்துவதுடன் தரவு பகுப்பாய்வுக்கும்/செயலாக்கத்திற்கும் மற்றும் திட்டமிடுதலுக்கும் உதவிகரமாக அமையும் என துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளதை குழு அறிகிறது. இப்பணி, பொது மக்களுக்கு எவ்வாறு பயனுள்ளதாக அமையும் என்பதை குழு அறிய விரும்பியது.

25. கல்விசார் மேலாண்மை திட்டத்தின் மூலம் பராமரிக்கப்படும் தகவல்களை குறிப்பிட்ட கால அளவில் (Frequent updating) மாற்றங்கள் செய்யும் விதமாக வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

26. மேற்படி பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மாற்றங்களுடன் கூடிய விவரங்களை கொண்டு திட்டமிடுதல் (Planning) மதிப்பீடு செய்தல் (Evaluation) மற்றும் பகுப்பாய்வு செய்தல் (Analysis) அறிக்கைகள் தயாரித்தல் போன்ற பணிகளை செய்ய முடியும் என்றும் துறை தெரிவித்தது.

27. மேற்படி அறிக்கைகளை காணும் வகையில் உள் பயனாளிகள் (துறை சார்ந்த அலுவலகம்/அலுவலர்கள்/மாணவர்கள்) மற்றும் வெளி பயனாளிகளுக்கு (பொதுமக்கள் அரசுசார நிறுவனங்கள், சர்வதேச மாநில மற்றும் மத்திய அரசு முகவாண்மை) வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

28. வெளி பயனாளிகளுக்கான அறிக்கைகளை காணும் வசதி மூலம் பொது மக்கள் தங்களுக்கு தேவையான தகவல் மற்றும் விவரங்கள் பெற முடியும் என்றும் துறை தெரிவித்தது.

IV. கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் புதிய பள்ளிகளை துவங்குதல்

29. தமிழ்நாட்டில் பள்ளிகளின் எண்ணிக்கை 57,000 என்றும், அவை அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் என்று மொத்தமாக உள்ளன என்றும், இதில் 1,35,000 மாணவர்கள் சேர்ந்துள்ளனர் என்றும், விழுப்புரம் மாவட்டம் கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ளது என்றும், தேனி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் பள்ளிகள் 2009–2010 ஆம் ஆண்டு 200 பள்ளிகள், 2010–2011 ஆம் ஆண்டு 344 பள்ளிகள், 2011–2012 ஆம் ஆண்டு 710 பள்ளிகள், 2012–2013 ஆம் ஆண்டு 50 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு "அனைவருக்கும் கல்வி திட்டத்தின்" கீழ் இயங்கி வருவதாகவும் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்தார். மேலும், 75% மத்திய அரசின் பங்கீடாகவும், 25% மாநில அரசின் பங்கீட்டின்படி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றும், எனினும் மத்திய அரசினுடைய நிதியுதவி 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு கிடைக்கப் பெறவில்லை என்றும், நிதியுதவி கிடைக்கப் பெறாத காரணத்தால் 2013–2014 ஆம் ஆண்டு மாநில அரசே 100 சதவிகிதம் நிதி ஒதுக்கீடு செய்து 50 பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன. (இணைப்பு–I) எனினும், இந்த ஆண்டும் மீண்டும் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு கோரி பிரேரணைகள் அனுப்பப்படுவதாக துறையின் அரசு முதன்மைச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

30. துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்த கருத்திற்கு பள்ளிகள் ஆரம்பிக்கக் கோரி எவ்வளவு மனுக்கள் நிலுவையில் உள்ளன என்றும், அதனை துறையால் எவ்வாறு பரிசீலிக்கப்படுகிறது என்றும் குழு அறிய விரும்பியது.

31. குழு, கோரிய விவரத்திற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர், பெறப்படுகிற மனுக்களை புவியியல் தகவல் வரைப்படத்தின் உதவியினால் கணினியில் பதிவு செய்யப்படுகிறது என்றும், முதலாவதாக, பள்ளியின் தேவைக்கேற்ப மாணவர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்றும், இரண்டாவதாக, அவ்விடத்தில் பள்ளி தொடங்குவதாக இருப்பின், அப்பகுதியின் சுற்றுப்புறத்தில் வேறு எந்த தனியார் பள்ளிகளோ, அரசு உதவிபெறும் பள்ளிகளோ இருக்கக் கூடாது என்றும், மூன்றாவதாக, அப்பகுதி பஞ்சாயத்து இரண்டு இலட்சம் ரூபாய் பணம் செலுத்திருக்க

வேண்டும் என்றும், நான்காவதாக, பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு போதிய நிலத்தினை காண்பிக்க வேண்டும் என்றும், அவ்வாறு சொந்த கட்டடம் கட்டுவதற்கு நிலம் இல்லை என்பதால் தனியார் கட்டடங்களில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும், 10 அல்லது 20 மாணவர்கள் தான் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிறார்கள் என்றும், அரசு செலவு செய்யும் தொகைக்கு ஏற்ப பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை இல்லை என்றும் தெரிவித்தார்.

32. துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்த கருத்திற்கு குழு ஆய்வு பயணம் மேற்கொண்டபோது, பஞ்சாயத்து மூலம் இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்தியும் நிலத்தைக் கொடுத்தும் பள்ளிகள் துவங்கப்படாமல் உள்ளது என்று சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கிறார்கள் என்றும், அதுபோன்று எத்தனை மனுக்கள் நிலுவையில் இருக்கிறது என்பதை குழு அறிய விரும்பியது.

33. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் 102 மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன என்று தெரிவித்தார்.

34. குழு, எத்தனை பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவுள்ளது என அறிய விரும்பியது.

35. அதற்கு, துறையின் அரசு முதன்மைச் செயலாளர் 120 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட வேண்டும், என்றும், தற்போது துறையின் இணை இயக்குநர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இது குறித்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறார் என்றும், இணை இயக்குநர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பள்ளிகளுக்கு தேவை இருக்கிறதா என்று ஆய்வு செய்து அதற்கான அறிக்கை சமர்பிப்பார்கள் என்றும் அரசு முதன்மைச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

V. மாநில அரசால் மாணவர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்டங்கள்

i. நான்கு இணை சீருடை வழங்குதல்

36. 2012–2013 ஆம் ஆண்டு முதல் மாணவ/மாணவியற்கு நான்கு இணைச் சீருடைகள் வழங்கப்படுகிறது . 2013–2014 ஆம் கல்வியாண்டில் நான்கு இணை சீருடைகள் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, 2013–2014 ஆம் ஆண்டில், 31,74,698 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.353.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று துறை தெரிவித்தது.

ii. இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை

37. மாணவர்கள் அனைவரும் இடைநிலை கல்வியை இடைநிற்றல் இன்றி தொடர, அரசால் சிறப்பு ஊக்கத் தொகை அளிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்றும், 2013–2014– இல், 24.76 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.381 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

iii. பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்

38. அரசின் முதன்மைத் திட்டங்களில் ஒன்று பன்னிரெண்டாம் வகுப்பு மாவணர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் ஆகும். இத்திட்டம் நாட்டிற்கே ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. பிற மாநிலங்களும் இத்திட்டத்தை ஆர்வத்துடன் பின்பற்றத் தொடங்கியுள்ளன. 2013–2014 இல், இத்திட்டம் தொடரப்பட்டு ரூ.925.01 கோடி செலவில் 5.50 இலட்சம் மாணவர்கள் பயன் அடைவார்கள் என்று துறை தெரிவித்தது.

iv. காலணிகள் வழங்குதல்

39. மாணவர்கள் வெறும் கால்களில் நடந்தால் சில தொற்று நோய்களுக்கு ஆளாகி அவர்களது உடல் நலன் பாதிக்கப்படும். இதனைத் தவிர்க்க அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையின்றி ஒரு இணை காலணிகள் அரசால் வழங்கப்படுகிறது.

40. 2013–2014 ஆம் ஆண்டில் புதிதாகச் சேர்க்கப்படும் 6.10 இலட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ.8.47 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

v. கல்வி உபகரணங்கள் வழங்குதல்

41. கற்றல் செயல்பாடுகள் பொருளுள்ளதாகவும், எளிமையாகவும் குழந்தைகள் விரும்பத்தக்க வகையிலும் அமைந்திட அரசால் புத்தகப்பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள், கிரையான்கள் மற்றும் நிலவரைபடப் புத்தங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகிறது என்றும் துறை தெரிவித்துள்ளது.

42. 2013–2014 இல் அரசு மற்றும் அரசு உதவி பெறும பள்ளிகளில் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்கள் பயனடைவதற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.33.72 கோடி கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது:–

பொருள்	வகுப்புகள்	பயனடையும் மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்)	தொகை ரூபாய் (கோடியில்)
புத்தகப்பை	1 முதல் 12	13.00	19.79
கணித உபகரணப் பெட்டி	6 முதல் 10	9.67	3.38
கிரையான்கள்	1 முதல் 2	33.63	7.70
வண்ணப் பென்சில்	3 முதல் 5		
வரைபடப் புத்தகம்	6 முதல் 10 வரை	9.67	2.85
மொத்தம்			33.72

vi. நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல்

43. 2012–2013 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 81.02 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.102.69 கோடி செலவில் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன என்றும், 2013–2014 ஆம் கல்வியாண்டில் 86.71 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.110.96 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

vii. பாடநூல் வழங்குதல்

44. 2012–2013 ஆம் கல்வியாண்டில் ரூ.257.41 கோடி செலவில் ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் 92 இலட்சம் மாணவர்களுக்குப் பாடநூல்கள் வழங்கப்பட்டன என்றும், 2013–2014 ஆம் கல்வியாண்டில் 97.70 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.217.22 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

viii. கம்பளிச்சட்டை

45. மலைப்பிரதேசங்களில் பயிலும் மாணவர்களில் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறுவோருக்குக் கம்பளிச் சட்டை வழங்கப்படுகிறது. இதனால் 10.30 இலட்சம் மலைவாழ் மாணவர்கள் பயனடைவர். இதற்காக, ரூ.4.12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

ix. மிதிவண்டி வழங்குதல்

46. 2012–2013 இல் அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் பதினோராம் வகுப்பு பயிலும் 6.31 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.194.20 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன என்றும் துறை தெரிவித்தது.

47. மேலும், இத்திட்டம் 2013–2014 ஆம் கல்வியாண்டிலும் தொடரும் என்றும் 6.30 இலட்சம் மாணவர்கள் பயனடைய ரூ.200.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

x. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

48. 1 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2012–2013 இல் 48.63 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

49. 2013–2014 ஆம் கல்வியாண்டில் 53.40 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும் துறை தெரிவித்தது.

xi. பேருந்து பயண அட்டை

50. மாணவர்கள் எளிதாக பள்ளி சென்றுவர 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது என்றும், 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் வழியான 14.02 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும், இத்திட்டத்திற்கென ரூ.323.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று துறை தெரிவித்தது.

VI. உள்ளாட்சி அமைப்புகளிருந்து பெறப்பட்ட நூலக தீர்வை குறித்த விவரங்கள்

51. தமிழ்நாடு முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து 2013–2014 ஆம் ஆண்டு நூலகத் துறைக்கு பெறப்பட்ட நூலகத் தீர்வை குறித்த விவரத்தினை மாவட்ட வாரியாகவும், பெறப்படாத உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து அத்தொகையினை பெற துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும் குழு அறிய விரும்பியது.

52. பொது நூலகத் துறையின் முக்கிய வருவாயாகத் திகழ்வது நூலக வரியாகும் என்றும், அவ்வரியின் மூலம் பெறப்படும் தொகையினைக் கொண்டே நூலக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், 2013–2014 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்திற்கான மாவட்ட வாரியான நூலகவரி தீர்வை – வசூல் மற்றும் நிலுவை விவரங்கள் துறையால் குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. துறையால் அளிக்கப்பட்ட தகவலின் படி ரூ.11780.46 நூலகத் தீர்வை நிலுவையில் உள்ளதாக குழு அறிந்தது. (இணைப்பு–II) மேலும் நூலகத் தீர்வை உரிய நேரத்தில் பெறப்பட்டால் மட்டுமே நூலகத் துறை செம்மையாக செயல்படும் என்கிற தகவலை குழுவால் தெரிவிக்கப்பட்டது.

53. குழுவின் கருத்திற்கு, துறை சம்பந்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலர்களை நேரடிாக அணுகி, நிலுவையாக உள்ள நூலக வரியினை உடனடியாக வசூல் செய்வதற்கான துரித நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பொது நூலக இயக்குநரின் நேர்முகக் கடித எண்.9259/இ1/2013, நாள் 21.3.2014–இன்படி அனைத்து மாவட்ட நூலக அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

54. நிலுவையாக உள்ள நூலக வரி, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அவரவர்தம் நிர்வாக அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளால் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு செலுத்தப்பட வேண்டிய நூலக வரி நிலுவைத் தொகையினை உடனடியாக செலுத்துவதற்கு ஆவன செய்திடுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அரசு நேர்முகக் கடித எண்.5247/இ1/2013, நாள் 30.4.2014–இன்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

55. இதன் அடிப்படையில் அனைத்து மாவட்ட நூலக அலுவலர்களும் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவன அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு, நூலக வரித் தீர்வை பெற நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

56. உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையினை விரைவில் பெற்று அதன் தொடர்பான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற பேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

VII. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தல்/மாணவியர் விடுதிகள் அமைத்தல்/ மாதிரி பள்ளிகளை ஏற்படுத்துதல்.

57. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தல் / மாணவியர் விடுதிகள் ஏற்படுத்துதல் / மாதிரிப் பள்ளி ஏற்படுத்துதல் ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி / தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் குறித்து குழு அறிய விரும்பியது.

58. குழு கோரிய விவரங்களுக்கு துறை 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் புதிய பள்ளிகள் தரம் உயர்த்தப்படவில்லை என்றும், 13 மாவட்டங்களிலுள்ள 45 பின்தங்கிய ஒன்றியங்களில் (Educationally Backward Blocks) மாணவியர் விடுதிகள் தற்காலிகமாக வாடகை கட்டிடங்களில் துவங்கப்பட்டுள்ளது என்றும், இதற்கான நிரந்தரக் கட்டிடம் பொதுப்பணித் துறையின் மூலம் கட்டப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

59. 2013–2014 ஆம் கல்வியாண்டில் 26 மாதிரிப் பள்ளிகள் 26 பின்தங்கிய ஒன்றியங்களில் 6–ம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை (ஆங்கில வழிக் கல்வி) துவங்கப்பட்டது என்றும், 11 மற்றும் 12–ம் வகுப்புகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கில வழியிலும் துவங்கப்பட்டது என்றும், மாதிரிப் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் இதர பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப் பண்பிற்கான பயிற்சி (School Leadership Programme) 2013–2014 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது என்றும் துறை தெரிவித்தது.

60. 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை குறித்தும் குழு அறிய விரும்பியது.

61. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2009–2010 ஆம் ஆண்டில் 200 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்றும், 2010–2011 ஆம் ஆண்டில் 344 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

62. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ், மேற்காண் 1254 தரமுயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் தற்பொழுது செயல்பட்டு வருகிறது என்றும், 2012–2013, 2013–2014 ஆம் ஆண்டுகளில் மத்திய திட்ட ஏற்பளிப்புக் குழுவால் (Project Approval Board) புதிதாக நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்த ஒப்பளிப்பு அளிக்கப்படவில்லை என்றும் துறை தெரிவித்தது.

மாதிரிப் பள்ளிகள்

63. 45 பின்தங்கிய ஒன்றியங்களில் முதல் கட்டமாக 2010–2011 ஆம் ஆண்டில் 18 மாதிரிப் பள்ளிகள் மற்றும் இரண்டாம் கட்டமாக 2013–2014 ஆம் ஆண்டில் 26 மாதிரிப் பள்ளிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்றும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் கட்டடப்பணிகள் நடைப்பெற்று வருகிறது என்றும் 2013–2014 ஆம் ஆண்டில் அரசால் மாதிரிப் பள்ளிகளின் கட்டடப் பணிக்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.57.23 கோடி ஒப்பளிக்கப்பட்டு கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் துறை தெரிவித்தது.

64. மேற்படி, 44 மாதிரிப் பள்ளிகளுக்கு தலா 7 முதுகலை ஆசிரியர் பணியிடங்களும், 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 1 கணினி ஆசிரியர், 3 சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர் பணியிடம் என அனைத்து மாதிரிப் பள்ளிகளுக்கும் பணியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

65. முதற்கட்டமாக துவங்கப்பட்ட மாதிரிப் பள்ளிகளில் 12 பள்ளிகளுக்கான கட்டடம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் கட்டப்பட்டு அரசால் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றும், இதர பள்ளிகளுக்கான கட்டடப் பணி நடைபெற்று வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

66. நடைபெற்று வரும் பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற்று பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

பெண்கள் விடுதி

67. 44 மாணவியர் விடுதிகளுக்கான கட்டடப் பணிகள் பொதுப் பணித்துறையின் மூலம் மேற்கொண்டு வருகிறது. கூடுதல் நிதியாக ரூ.45.44 கோடி மதிப்பீட்டில் அரசால் ஒதுக்கீடு செய்து பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

VIII. நடமாடும் ஆலோசனை மையங்கள் அமைத்தல்

68. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.2.00 கோடி மதிப்பில் 10 மண்டலங்களில் 10 நடமாடும் ஆலோசனை மையங்கள் செயல்படுத்தப்படவுள்ளன என்றும், இம்மையங்கள் நடமாடும் ஊர்திகள் மூலம் மாணவர்களை சென்றடைய உள்ளன என குழு அறிந்தது. நடமாடும் ஆலோசனை மையங்களில் செயல்பாடு குறித்து குழு அறிய விரும்பியது.

69. குழு கோரிய விவரங்களுக்கு துறை இதன் தொடர்பான நடவடிக்கையாக அரசாணை எண்.298 ப.க. (இ1) துறை, நாள் 30.11.2012–ன்படி 32 மாவட்டங்களையும், நான்கு / மூன்று மாவட்டங்களை ஒன்றிணைத்தும், அதில் ஒரு மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டும், 10 மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு ஆலோசனை மைய ஊர்தி என்ற அளவில் 10 ஆலோசனை மைய ஊர்திகளுடன் உளவியலில் பட்ட மேற்படிப்பு கல்வித் தகுதி உள்ள (M.Sc. Psychology) ஒரு உளவியல் ஆலோசகர் என்கிற அடிப்படையில் 10 உளவியல் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, சென்னை, கோயமுத்தூர், வேலூர், கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய 10 மண்டலங்களில், மேற்படி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இவ்வாறு நியமிக்கப்பட்ட உளவியல் ஆலோசகர்கள் நேரடியாக பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் மற்றும் குழுவாகவும் உளவியல் ஆலோசனை வழங்குகின்றனர் என்றும், ஆசிரியர்களுக்கும் உளவியல் சார்ந்து பயிற்சிகளும் ஆலோசகர்களால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் (2013–2014) 1,43,289 மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கப்பட்டது. இவ்வாண்டில் (2014–2015) கூடுதலாக 5 மண்டலங்களில் இத்திட்டமானது விரிவுப்படுத்தப்படவுள்ளது என துறையால் தெரிவிக்கப்பட்டது.

70. அரசாணையின் பத்தி 5–இல் நடமாடும் ஆலோசனை மையங்களுக்கான செலவினம் குறித்த நெறிமுறைகள் தனியாக வெளியிடப்படுவதாக துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளன என குழு அறிந்தது.

71. நடமாடும் ஆலோசனை மையங்களுக்கான செலவினம் குறித்து துறையின் அரசாணையில் தெரிவித்தவாறு வெளியிடப்பட்ட நெறிமுறைகளின் நகல் ஒன்று குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. மேலும், கூடுதலாக 5 மண்டலங்களின் கீழ் இணைக்கப்பட்ட மாவட்டங்களின் விவரங்களையும் குழுவிற்கு அனுப்பி வைக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.

IX. கிராமப்புறக் குழந்தைகளின் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துதல்

72. பகுதி – II திட்டத்தின் கீழ் கிராமப்புறக் குழந்தைகளின் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துதல் குறித்து துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

73. அதற்கு, துறை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் அவர்கள் 320 அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் ஆங்கில மொழித்திறனை வளர்க்கும் வகையில் ஆங்கில வழி வகுப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது என்றும், ஆங்கில மொழி பயிற்சித்தாள் மாணவர்களுக்கு ஆங்கில மொழியின் பல்வேறு பகுதிகளில் ஆங்கில மொழி, அறிவினை வளர்த்துக் கொள்ள ஏதுவாக இருக்கும் என்றும், பல்கலைக்கழகம், கல்லூரிகள், பெங்களூரிலுள்ள மண்டல ஆங்கில மொழி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் போன்றவற்றில் பணிபுரியும் வல்லுநர்கள் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்களை பயன்படுத்தி பயிற்சித்தாள்களை தயாரிக்கலாம் என்றும், இப்பயிற்சித்தாள்களை வானொலி நிகழ்ச்சி முடிந்தவுடன் மாணவர்களுக்கு அளிக்கலாம் என்றும், மேலும் மாணவர்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் ஆங்கிலமொழி அறிவினை மேம்படுத்தும் கூறுகளையும் இப்பயிற்சித்தாள்களில் வழங்கலாம் என்றும், ஆசிரியர்கள் இப்பயிற்சித்தாள்களை மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க முடியும் என்றும் தெரிவித்து, அதற்கான செலவின விவரங்களை கீழ்கண்டவாறு பட்டியலிட்டு, கிராமப்புற குழந்தைகளின் ஆங்கிய அறிவை மேம்படுத்தும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் துறையால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

செலவினம்

வ. எண்.	செயல்முறைகள்	அலகு	அலகு செலவு (இலட்சத்தில்)	தொகை (இலட்சத்தில்)
1	தமிழ்நாட்டிலுள்ள 13 வானொலி நிலையங்களுக்கான ஒலிபரப்புக் கட்டணம்	100	0.350	35.000
2	வானொலிப் பாடங்களை மேம்படுத்துதல்	100	0.050	05.000
3	பயிற்சித்தாள்கள் தயாரித்தல் மற்றும் கள ஆய்வு	100	0.020	02.000
4	பயிற்சித்தாள்கள் அச்சிடுதல்	12.983	0.006	77.898
	மொத்தம்			119.898

74. துறை, மேலும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவிற்கு, 2013–2014 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின் கீழ் கிராமப்புற குழந்தைகளின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ.119,90,000/– தொடராச் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்து, வரும் கல்வி ஆண்டு முதல் இத்திட்டத்தினை செயல்படுத்தப்படவுள்ளது என துறை தெரிவித்தது.

75. துறை தெரிவித்தது போல் மாணவர்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் ஆங்கில மொழி அறிவினை மேம்படுத்தும் கூறுகளையும் அடங்கிய பயிற்சித்தாள்களை வழங்கி ஆய்வினை மேற்கொண்டு அதனை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

X. நடுநிலைப் பள்ளிகளில் கணிதம் கற்கும் திறனை வலுப்படுத்துதல்

76. ரூ.128 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடுநிலைப் பள்ளிகளில் கணிதம் கற்கும் திறனை வலுப்படுத்துதல் பணிக்காக துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, மாணவர்களின் பங்களிப்பு, துறை கண்ட முன்னேற்றம், துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, குறித்து குழு, அறிய விரும்பியது.

77. குழு கோரிய தகவலுக்கு துறை கணிதக் கற்றல் திறனை வலுப்படுத்த ரூ.128 இலட்சம் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக துறையால் தெரிவிக்கப்பட்டது.

78. துறையால் அளிக்கப்பட்ட தகவல் குழுவால் ஏற்றத்தக்க வகையில் இல்லை. எனவே, துறை இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XI. குறுஞ்செய்தி (SMS) மூலம் ஆசிரியர்களின் வருகையினை கண்காணித்தல்

79. குறுஞ்செய்தி (SMS மூலம் ஆசிரியர்களின் வருகையினை கண்காணித்தலுக்காக தனி மென்பொருள் உருவாக்கப்படுகிறது என்றும், அதனை மேலாண்மைத் தகவல் முறைமையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதா என்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 5 அரசு மேல்நிலைப்பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு முன்னோடி திட்டமாக செய்ல்படுத்தப்பட்டு வருவதாகவும் குழு அறிந்தது. இது குறித்து துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

80. குழு கோரியதற்கு, துறை குறுஞ்செய்தி மூலம் ஆசிரியர்களின் வருகை பதிவினை கண்காணிப்பதற்காக தனித்திறன் வாய்ந்த மென்பொருள் உருவாக்கப்பட்டு அதனை கல்விசார் மேலாண்மைத் தகவல் முறைமையை ஒருங்கிணைக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஐந்து அரசு மேல்நிலைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், மேற்படி திட்டம் சிறப்பாக செயல்படுவதால் அதனை அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர்களின் வருகையினை இணையதளம் மூலம் வருகை பதிவேட்டினை (Web based Teachers Attendence Monitoring System) மூலம் பராமரிக்கலாமா என துறையால் முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் துறை தெரிவித்தது.

81. துறை, மேற்படி பணியினை முடிப்பதற்கு ஒரு கால வரையரையினை நிர்ணயித்து அதற்கான பணியினை முடிக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. மேலும் இது குறித்து அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XII. இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை

82. இடைநிற்றலை குறைத்திட சிறப்பு ஊக்கத் தொகை எவ்வாறு, எப்போது மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது என்றும், அவை வழங்குவதற்கான வழிமுறைகள். பெறுவதற்குரிய தகுதிகள் குறித்தும், 2013–2014 ஆம் ஆண்டில் ஊக்கத்தொகை வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எந்த மாவட்டத்தில் அதிகமாக/குறைவாக உள்ளது என குழு அறிய விரும்பியது.

83. 2011–2012 ஆம் கல்வி ஆண்டு முதல் இடைநிற்றலை குறைப்பதற்கு பத்தாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு தலா ஆயிரத்து ஐநூறு ரூபாயும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவியருக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் ஊக்கத் தொகை அரசால் வழங்கப்படுகிறது என்றும், இத்தொகை மாணவ மாணவியரின் பெயரில் வங்கியில் குறைந்தபட்சம் இருப்பு (Minimum Balance)

இல்லாத கணக்குத் துவங்கப்பட்டு இத்தொகை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

மூன்று ஆண்டுகளில் துறையால் வழங்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:–

2011–2012	313.13 கோடி
2012–2013	353.56 கோடி
2013–2014	381 கோடி

84. மேலும், 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டில் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணாக்கர்களுக்கு வங்கிக் கணக்கில் தொகை செலுத்தும் பணி தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெற்று வருவதாகவும் துறை தெரிவித்தது.

85. 2013–2014 ஆம் ஆண்டிற்கான மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு துவக்கிய எண்ணிக்கை விவரம் அந்தந்த மாவட்டங்கள் மூலம் பெறும் பணி நடைபெற்று வருவதாகவும் துறை தெரிவித்தது.

86. 2012–2013 ஆம் கல்வியாண்டில் சிறப்பு ஊக்கத்தொகை பயனாளிகள் அதிகமாக உள்ள மாவட்டம் வேலூர் என்றும், மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 30,856 என்றும், குறைவாக பயனடைந்த மாவட்டம் நீலகிரி மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 4546 எள்றும், துறை தெரிவித்தது.

87. 2013–2014 ஆம் கல்வியாண்டில் சிறப்பு ஊக்கத் தொகை பயனாளிகள் அதிகமாக உள்ள மாவட்டம் வேலூர் என்றும் மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை 3,43,403, என்றும் குறைவாக பயனடைந்த மாவட்டம் பெரம்பலூர் என்றும் எண்ணிக்கை 4291 எள்றும் துறை தெரிவித்தது.

88. துறை அளித்த தகவலின்படி, 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளின் தொடர்ச்சியாக வேலூர் மாவட்டத்தில் தான் அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் சிறப்பு ஊக்கத் தொகையினை பெற்றுள்ளனர் என குழு அறிந்தது அதற்கான காரணம் இடை நிற்றல் அம்மாவட்டத்தில் அதிகமாக உள்ளது என்று குழு கருதுகிறது.

89. எனவே, துறை சிறப்பு ஊக்கத் தொகையினை வழங்குவதோடு, வேலூர் மாவட்டத்தில் ஏன் பயனாளிகள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என ஆய்வினையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XIII. அனைத்து பள்ளிகளிலும் அன்னையர் பள்ளி பார்வைக் குழுக்கள் அமைத்தல்

90. அனைத்துப் பள்ளிகளிலும் சமூகத் தணிக்கை மற்றும் பள்ளி வளர்ச்சித் திட்டம் தயாரித்திட பள்ளி நிர்வாகக் குழுவுடன், அன்னையர் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டதை குழு அறிந்தது. அன்னையர் குழுக்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன, அக்குழுவின் உறுப்பினர்கள் யார், யார் அக்குழுவின் செயல்பாடு குறித்து குழு அறிய விரும்பியது.

91. குழு, கோரியதற்கு துறை, அரசு அதிகாரிகள் அல்லது தத்தம் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் என்னென்ன வசதிகள் உள்ளன, என்னென்ன வசதிக் குறைபாடுகள் உள்ளன, முறையான பராமரிப்புகள் செய்யப்படுகின்றனவா என்பதை பள்ளியின் நுகர்வோரான பெற்றோரே நேரில் சென்று சமூக ஆய்வு (Community Inspection) என்கிற வகையில் ஆய்வு செய்து குறைபாடுகளை நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வது நிறைவான நலம் பயக்கும் எனக் கருதப்படுகிறது என்றும், அதன்படி

i) மாணவ/மாணவியரின் தாய்மார்கள், வாரத்தில் ஒரு நாள், ஐந்து பேர் கொண்ட குழுவாக சென்று பள்ளியில் உள்ள அனைத்து வசதிகளையும் பள்ளி வேலை நாட்களில் பார்வையிட அனுமதித்தல் வேண்டும் என்றும், இவர்களின் பார்வைக் குறிப்புகள் ஒரு பார்வைப் புத்தகத்தில் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டும். தாய்மார்களைத் தேர்வு செய்யும் போது கீழ்கண்டவாறு பல்வேறு வகுப்புகளில் இருந்தும் பிரதிநிதிகள் உள்ளடங்கியவாறு அமைத்தல் வேண்டும் என்றும்

1.	மழலையர் வகுப்பு	1 நபர்
2.	1 ம் வகுப்பு முதல் 3ம் வகுப்பு வரை	1 நபர்
3.	4ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை	1 நபர்
4.	6 ம் வகுப்பு முதல் 10 ம் வகுப்பு வரை	1 நபர்
5.	11 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை	1 நபர்

ii) ஒரு முறை பார்வையிட்ட குழுவைச் சேர்ந்தவர்களே திரும்பவும் பார்வையிடும் வண்ணம் இருத்தல் கூடாது என்றும், பிரதிநிதிகள் குலுக்கல் முறையில் (Random method) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், இதில் பாரபட்சம் ஏதும் இருத்தல் கூடாது என்றும்,

iii) பள்ளியில் உள்ள கழிப்பறை, குடிநீர் வசதி , ஆய்வக வசதி, கணினி வசதி, நூலக வசதி, விளையாட்டு வசதிகள், வகுப்பு அறை வசதிகள் போன்ற எல்லா வசதிகள் சாரந்து பள்ளியின் அனைத்து பகுதிகளையும் பார்வையிட்டு இவர்கள் தமது பார்வைக் குறிப்பைப் பதிவு செய்தல் வேண்டும் என்றும், பார்வைக் குறிப்புகளை ஒவ்வொரு வாரமும் பார்த்து குறைபாடுகள் உள்ள இடங்களில் அதனைச் சரிசெய்ய தாளாளர்/ செயலர் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தொடர் நடவடிக்கைகள் குறித்த குறிப்பு எழுதப்பட்டு அதில் தாளாளர்/செயலர் ஒப்பமிடப்பட வேண்டும். பார்வையின்போது முதல்வரோ அல்லது அவரின் பிரதிநிதியோ உடனிருக்கலாம் என்றும் துறை தெரிவித்தது.

XIV. கல்வியின் தரத்தை மேலும் உயர்த்த துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு

92. துறையால் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் நோக்கத்தோடு பள்ளிச் செல்லும் குழந்தைகளின் படிப்பு மற்றும் எழுதும் திறனை கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என குழு அறிந்தது. துறை தெரிவித்ததுபோல் மேற்கொண்ட ஆய்விக்குப்பின் துறையால் கண்டறியப்பட்ட முடிவுகளின்படி துறை மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

93. குழு, கோரியதற்கு துறை கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் நோக்கத்தோடு பள்ளி செல்லும் குழந்தைகளின் படிக்கும் மற்றும் எழுதும் திறனை கண்டறிய அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் நவம்பர் 2013 இல் இரண்டாம் வகுப்பு முதல் முதல் எட்டாம் வகுப்பு வரை ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களிடம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் படிக்கும் திறன், எழுதும் திறன் சோதிக்கப்பட்டது என்றும், சரளமாக தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்கள் 72 விழுக்காடு என்றும், சரளமாக ஆங்கிலம்

வாசிக்கத் தெரிந்தவர்கள் 54 விழுக்காடு என்றும், கண்டறியப்பட்டது என்றும், பிழை இல்லாமல் தமிழில் எழுதத் தெரிந்தவர்கள் 63 விழுக்காடாகவும், பிழையில்லாமல் ஆங்கிலம் எழுதத் தெரிந்தவர்கள் 47 விழுக்காடாகவும் இருந்தது என துறை தெரிவித்தது.

94. மேலும் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுனர்கள், குறுவள மைய ஆசிரியர் பயிற்றுனர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு குறைதீர் கற்பித்தல் பயிற்சி அளிக்கப்பட்டு வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு உதவியாக இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், மார்ச் 2014 இல் மாணவர்களிடம் படிக்கும் திறன், எழுதும் திறன் சோதிக்கப்பட்டது. மாணவர்களிடம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் படிக்கும் திறன், எழுதும் திறன் சோதிக்கப்பட்டது என்றும், சரளமாக தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்கள் 78 விழுக்காடு என்றும், சரளமாக ஆங்கிலம் வாசிக்க தெரிந்தவர்கள் 64 விழுக்காடு என்றும் கண்டறியப்பட்டது. பிழை இல்லாமல் தமிழில் எழுதத் தெரிந்தவர்கள் 58 விழுக்காடாகவும், பிழையில்லாமல் ஆங்கிலம் எழுதத் தெரிந்தவர்கள் 58 விழுக்காடாகவும் இருந்தது. இந்த ஆய்வின் மூலம் குழந்தைகளின் படிக்கும் மற்றும் எழுதும் திறன் அதிகரித்தது கண்டறியப்பட்டது என்றும் துறை குழுவிற்கு தெரிவித்தது.

XV. 2013–2014 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்

95. ரூ.88 லட்சம் மதிப்பீட்டில் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

96. அதற்கு துறையின் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் சார்பில் 4 உதவி தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு தலைமைப் பொறியாளர், தொழில்நுட்பக் கல்வி, சென்னை– 25, அவர்களுக்கு 88 லட்சம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக துறை தெரிவித்தது. அப்பணிகளில் ஒரு பணி முடியும் தருவாயில் உள்ளது என்றும், இரண்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும், துறை தெரிவித்தது.

97. எனினும், துறை தெரிவித்த தகவலின்படி, தருமபுரி மாவட்டம் பாலக்கோடு உதவித் தொடக்கக்கல்வி அலுவலகத்திற்கான கட்டடம் கட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதை குழு அறிந்தது.

98. கட்டடம் கட்டுவதற்கான போதுமான இடம் தேர்வு செய்யப்படாமல் தொடக்கக் கல்வி இயக்குநரால் நிதி ஒதுக்கீடு எவ்வாறு கோரப்பட்டது என்பதை கண்டு குழு வியப்படைகிறது. துறை நிதி ஒதுக்கீடு கோரும் முன்னர் இடம் தேர்வு குறித்து ஆய்வினை சரியான முறையில் மேற்கொள்ளவில்லை என்றும், அவ்விடத்திற்கான நிதியினை 2013–2014 ஆம் நிதி ஆண்டு முடிவுற்ற நிலையில் நிதியினை அரசுக்கு ஒப்பளிப்பு செய்தது குறித்த சரியான விவரங்களை துறையால் தெரிவிக்கப்படவில்லை என்றே குழு கருதுகிறது.

99. எனவே, இது குறித்து துறையால் உரிய முறையில் ஆய்வினை மேற்கொள்ளப்பட்டு அதன் விவரத்தினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XVI. 2013–2014 ஆம் ஆண்டில் பகுதி-II உட்கூறு–2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்

100. ரூ.38.60 லட்சம் செலவில் தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் ஆங்கில கல்வி பயிற்றுவித்தல் தொடர்பாக துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

101. குழு கோரிய விவரத்திற்கு துறை தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் கல்வி பயிற்றுவித்தலுக்கு ரூ.38.60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்நிதியில் ஆங்கில கல்வி பயிற்றுவித்தலுக்கு (English Module) தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அனைத்து பள்ளிகளுக்கும் வழங்குவதற்காக குறுந்தகடு (DVD) வடிவமைக்கப்பட்டு வருவதாக துறை தெரிவித்தது.

102. குறுந்தகடு வழங்கப்பட்ட பின்னர் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XVII. பள்ளிகளில் சதுரங்க விளையாட்டை அறிமுகப்படுத்துதல்.

103. மாணவர்களின் அறிவுத் திறன் மேம்படுத்த பள்ளிகளில் சதுரங்க விளையாட்டை அறிமுகப்படுத்திய பின்னர் மாணவர்களின் அறிவுத்திறன் முன்னேற்றம் குறித்து குழு அறிய விரும்பியது.

104. அதற்கு துறை மாணவ/மாணவியர்களின் அறிவுத் திறன் வளர்வதற்கும், கூர்மையாக சிந்திக்கும் ஆற்றல் விரிவடைவதற்கும் 7 வயது முதல் 17வயது வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு சதுரங்க விளையாட்டை 2012–2013 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், 2013–2014 ஆம் ஆண்டில் சதுரங்க போட்டிகளானது பல்வேறு நிலைகளில் (பள்ளி, குறுவட்டம், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம், மண்டலம் மற்றும் மாநிலம்) நடத்தப்பட்டது என்றும், அதில் 11,25,628 மாணவர்கள் சதுரங்க போட்டியில் கலந்து கொண்டனர் என்றும், அதன் விளைவாக மாணவர்களின் சிந்திக்கும் திறன் அதிகரித்து தேர்ச்சி சதவிகிதமும் அதிகரித்துள்ளது என்றும் 2014–2015 ஆம் ஆண்டில் இதனை உறுதிப்படுத்த துறை ரீதியான ஆய்வு மேற்கொள்ளப்படும் என துறை தெரிவித்தது.

105. குழு, 2012–2013 ஆம் நிதி ஆண்டில், சதுரங்கப் பலகைக்கென ரூ.45.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டும், 31.3.2013 வரை செலவினம் ஏதும் மேற்கொள்ளப்படாமலும், 2013–2014 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ஒதுக்கப்பட்டு அத்தொகையிலும் 31.3.2014 வரை செலவினம் ஏதும் மேற்கொள்ளாமல் அரசுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட காரணம் குறித்து குழு அறிய விரும்பியது.

106. அதற்கு, பள்ளிக் கல்வி இயக்குநர் சிறப்பு கட்டண நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டதால் அத்தொகையினை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதால் அதனை அரசுக் கணக்கில் திருப்பி செலுத்தப்பட்டுவிட்டதாக குழுவிற்கு தகவல் தெரிவித்தார்.

XVIII. பள்ளி நேரங்களில் பேரூந்து அரசு சேவையினை முறைப்படுத்துதல்

107. குழு, மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, பள்ளி நேரங்களில் மாணவர்கள் அதிகமாக ஏறி செல்லும் அரசு பேரூந்துகள் பேரூந்து நிருத்தத்தில் நின்று செல்வதே கிடையாது என்றும், அச்சமயங்களில் மாணவர்கள் விபத்தில் உயிர் இழக்க வாய்ப்பு உள்ளது என்றும், அரசால் மாணவர்களுக்கு வழங்கும் பயண அட்டை வழங்கியதற்கான பயன் இல்லாமல் போய்விடுகிறது என குழு கருதியது. எனவே, போக்குவரத்துத் துறையும், பள்ளிக் கல்வித் துறையும் இணைந்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு கருதியது. இதற்கு துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

108. குழு, தெரிவித்த கருத்திற்கு, ஒவ்வொரு மாதமும் போக்குவரத் துறையின் அரசு செயலாளரும், பள்ளிக் கல்வித் துறையின் செயலாளரும் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தி உரிய அறிவுரைகள் அவ்வப்போது ஒட்டுநர்களுக்கும், நடத்துனர்களுக்கும் வழங்கப்படுகிறது என பள்ளிக் கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

109. எனினும், துறை ரீதியான அறிவுரைகள் வழங்கினாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிரமமாக இருக்கிறது என குழு சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

110. குழுவின் கருத்துக்கு அரசு முதன்மைச் செயலாளர் பள்ளி நேரங்களில் மாணவர்களின் நலன் கருதி சிறப்பு பேரூந்துகளை இயக்கலாம் என்றும் குழுவிற்க தகவல் தெரிவித்தார்.

111. மாணவர்களின் பாதுகாப்பு கருதி பள்ளி நேரங்களில் ஆய்வு மேற்கொண்டு பள்ளிச் செல்லும் மாணவர்களுக்கு சிறப்பு பேருந்துகளை இயக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XIX. முப்பருவ முறையுடன் கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை

112. முப்பருவ முறையுடன் கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்தியதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது என்று துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் இம்முறையினை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மாணவர்களின் திறன் மேம்பாடு எவ்வாறு உள்ளது என்றும், இதனை கண்டறிய துறையால் ஏதேனும் மாதிரி ஆய்வு (Sample Survey) மேற்கொள்ளப்பட்டதா என்பதையும் குழு, அறிய விரும்பியது.

113. குழு, கோரிய தகவலுக்கு துறை, முப்பருவ முறையுடன் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினை ஒருசேர தமிழ்நாடு முதலில் அறிமுகப்படுத்தியுள்ளது என்றும், ஒரு கல்வி ஆண்டில் பயில வேண்டிய பாடங்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டு பருவத்திற்கு ஏற்ப பாடநூல்கள் தனித்தனியாக அளிக்கப்படுகின்றன என்றும், இதனால் புத்தகச் சுமை குறைக்கப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு பாடவேளையும் பாடப்பொருள் கற்பிக்கப்பட்டவுடன் செயல்பாடுகள் வழி மதிப்பிடப்படுவதால் தேர்வு பயமும் மன அழுத்தமும் இன்றி மாணவர்கள் எளிதாக மதிப்பீட்டினை எதிர்கொள்கின்றனர் என்றும் இதனால் பாடச்சுமையும் குறைக்கப்பட்டு மாணவர்களின் படைப்பாற்றல் திறன் அதிகரித்துள்ளது என துறை தெரிவித்தது.

114. 2012–2013 இல் அறிமுகப்படுத்தப்பட்ட முப்பருவ முறையுடன் கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினால் விளைந்த மாணவர்களின் திறன் மேம்பாட்டை கண்டறியும் பொருட்டு அனைவருக்கும் கல்வி இயக்கம் அடைவுத் தேர்வு ஒன்றை தொடக்கக் கல்வியில் பயிலும் 3,5,8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்டுள்ளது என்றும், இம்முறையில் கல்விசார் மதிப்பீட்டுடன் கல்வி இணைச் செயல்பாடுகளின் மதிப்பீட்டையும் செய்வதன் மூலம் மாணவர்களிடம் புதைந்து கிடக்கும் உள்ளார்ந்த திறன்களையும் படைப்பாற்றலையும் வெளிகொணர முடிவதுடன் அவர்களை கல்வி சார்பகுதியில் வலிமை உள்ளவர்களாகவும் ஈடுபாடு உடையவர்களாகவும் இருக்குமாறு செய்ய முடியும் என்ற நோக்கத்தில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் இதுசார்ந்து ஏப்ரல் 2013 இல் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 6,03,222 மாணவர்களை சோதித்த போது அவர்களின் சராசரி செயல்பாடு (Average performance) 92 விழுக்காடாக இருந்தது என கண்டறியப்பட்டது என்றும், மேலும் 95 விழுக்காடு ஆசிரியர்கள் முப்பருவ முறையுடன் கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினை நன்கு உணர்ந்திருந்தனர் என்றும் 88 விழுக்காடு பெற்றோர்கள் இது சார்ந்து விழிப்புணர்வை பெற்றிருந்ததையும் வரவேற்பு அளித்ததையும் அறிய முடிந்தது என்றும் துறை தெரிவித்தது.

115. மேலும், 413 ஒன்றியங்களில் 7907 பள்ளிகளில், 2.9 இலட்சம் மாணவர்களிடம் கற்றல் அடைவு திறனை கண்டறியும் பொருட்டு , NCERT வழிகாட்டுதலின் அடிப்படையில் ஜனவரி 2014–இல் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், 2012 ஆம் ஆண்டை விட தமிழ், ஆங்கிலம், கணிதம் பாடத்தில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு மேல் எடுத்த மாணவர்கள் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருந்ததை அறிய முடிந்தது என்றும் துறை தெரிவித்தது.

116. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை சார்ந்து துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

117. 2012–2013 ஆம் கல்வியாண்டில் ஒன்றாம் முதல் எட்டாம் வகுப்புகளுக்கு தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும் முப்பருவ முறையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட இப்புதிய மதிப்பீட்டு முறை வளரறிமுறை, தொகுத்தறி முறை என்னும் இரண்டு மதிப்பீட்டு முறைகளை உள்ளடக்கியுள்ளது. பாடப்பகுதிகள் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து கற்பிக்கும்போதே மாணவர்களை மதிப்பிடுவதாக இம்முறை அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடக் கருத்தும் கற்பிக்கப்பட்டவுடன் மதிப்பிடப்படுவதால், மாணவர்கள், கற்ற நிகழ்வை மகிழ்ச்சியும் எதிர்கொள்கின்றனர். உடனுக்குடன், செய்யப்படும் இம்மதிப்பீட்டினால் மாணவர்கள் கற்றல் சுமையின்றி பாடங்களை எளிதாக செயல்பாடுகளின் வழி புரிந்து கொள்கின்றனர். இம்முறையைச் செயல்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வழிகாட்டி விதிமுறைகள், பாடக் கையேடுகளை ஒன்றாம் முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஆறாம் முதல் எட்டாம் வகுப்பு வரை உருவாக்கி பயிற்சியும் அளித்துள்ளது. மாவட்ட, ஒன்றிய அளவில் அளிக்கப்பட்ட பயிற்சிகள் அனைத்து தொடக்க, உயர்தொடக்க பள்ளி ஆசிரியர்களைச் சென்றடைந்துள்ளன என்றும், தொடர்ந்த கல்வியாண்டிலும் வலுவூட்டல் பயிற்சியும் அளிக்கப்பட்டது. வரும் கல்வியாண்டில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

118. 2013–2014 இல் ஒன்பதாம் வகுப்பிற்கு நீட்டிக்கப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையைச் செயல்படுத்த அரசாணை(1டி) எண்.197, பள்ளிக்கல்வித் (ஈஆர்டி) துறை, நாள் 26.6.2013, இன்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.98.00 இலட்சத்தில் ஒன்பதாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சிக்கான கட்டகங்கள் வழங்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன என்றும் துறை தெரிவித்தது.

119. வரும் கல்வியாண்டிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்பெறும் வண்ணம் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை சார்ந்து வலுவூட்டல் மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் நடத்தப்பட உள்ளன என துறை தெரிவித்தது.

120. திட்டத்தின் முழுபயன் பெறும் வகையில் துறை ரீதியான ஆய்வினை மேற்கொண்டும் அவ்வப்போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் இடையே கலந்தாய்வு நடத்தப்பட்டால் இத்திட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்த முடியும் என்றும் குழு கருதியது.

121. எனவே, துறை ரீதியான ஆய்வினை மேற்கொண்டு அதனை அறிக்கையாக குழுவிற்று அனுப்பி வைக்குமாறு பரிந்துரை செய்கிறது.

XX. மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் செயல்பாட்டை முறைப்படுத்துவதற்கு ஒரு உயர்மட்ட குழு அமைத்தல்

122. மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் செயல்பாட்டை முறைப்படுத்துவதற்கு, ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டதாகவும், அதற்கு பள்ளிக் கல்வி இயக்குநர், தலைவராகவும் நியமித்து, தற்போதுள்ள விதிமுறைகளின்படி, பள்ளிகளுக்கு குறைந்தபட்சம் இருக்க வேண்டிய நிலப்பரப்பு தொடர்பாக ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரைகளை அளிக்கப்படவுள்ளதாகவும் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளதை குழு அறிந்தது. குழுவினால் பரிந்துரைகள் வழங்கப்பட்டதா என்றும், அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அவற்றின் விவரங்களை குழு அறிய விரும்பியது.

123. குழு, கோரியதற்கு துறை அரசாணை(1டி) எண்.54 பள்ளிக்கல்வி (x2) துறை நாள் 5.3.2013–ன்படி தனியார் சுயநிதி பள்ளிகளில் குறைந்தபட்ச இடவசதி ஒரே அமைவிடத்தில் ஏற்படுத்தாத பள்ளிகள் சார்பாக இடவசதி சார்ந்த விதியை நிர்ணயிப்பது தொடர்பாக அரசுக்கு பரிந்துரை செய்திட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது என்றும், குழுவில் கீழ்க்காணும் உறுப்பினர்கள், இடம் பெற்றுள்ளனர் என்றும், துறை தெரிவித்தது.

1.	பள்ளிக் கல்வி இயக்குநர்	தலைவர்
2.	உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அல்லது அவர்களால் முன்மொழியப்படும் அலுவலர்	உறுப்பினர்
3.	ஆணையர்/இயக்குநர், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை இயக்ககம் அல்லது அவர்களால் முன்மொழியப்படும் அலுவலர்	உறுப்பினர்
4.	தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை	உறுப்பினர்
5.	ஊரக வளர்ச்சித் துறை பிரதிநிதி(ஆணையர், ஊரக வளர்ச்சித் துறை அல்லது அவர்களால் முன்மொழியப்படும் அலுவலர்)	உறுப்பினர்
6.	தொடக்கக் கல்வி இயக்குநர்	உறுப்பினர்
7.	மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்	உறுப்பினர் – செயலாளர்

124. மேற்படி, குழு. உறுப்பினர்களைக் கொண்டு கூட்டம் நடத்தப்படும் அவரவர் துறை சார்ந்த விதிகள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் நடைமுறையிலுள்ள தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் ஆகியவற்றை பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டும் மிகக் குறைந்த நிலப்பரப்பில் செயல்படும் பள்ளிகளை குழு நேரில் ஆய்வு செய்தும் குறைந்தபட்ச நில நிர்ணயம் சார்ந்து சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பள்ளி நிர்வாகிகள், பள்ளி நிர்வாக சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள், பெற்றோர், ஆசிரியர், மாணவர், மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகியோருடன் கருத்து கேட்பு கூட்டமும் நடத்தப்பட்டது என்றும், பள்ளிகள் பார்வை அடிப்படையிலும், கருத்து கேட்பு கூட்டங்களில், பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் அடிப்படையிலும் நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் அரசாணைகளின் அடிப்படையிலும் அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

125. குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினை, துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்கிற விவரத்தினையும், குழு அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையில் துறையால் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை குறித்தும், குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. குழுவால் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இடம் பெற்றுள்ள பரிந்துரைகளின் சுருக்கத்தினையும் அறிக்கையாக அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

XXI. பள்ளி வாகனங்களில் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு

126. பள்ளி வாகனங்களில் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என குழு அறிய விரும்பியது.

127. அதற்கு துறை, பள்ளி வாகனங்களில் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு குறித்து தமிழக அரசால் 31.8.2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் உள்துறையால் வெளியிடப்பட்டுள்ள (வரைவு விதிகள்)"தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளி வாகனங்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள் 2012" உருவாக்கப்பட்டு போக்குவரத்துத் துறையால் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அதனை அனைத்து மெட்ரிகுலேஷன் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும், துறை தெரிவித்தது. மேலும், வழிகாட்டுதல்களின்படி, பள்ளி வாகனங்கள் முறையாக செயல்படுகின்றனவா என்பதனை கண்காணிக்க கோட்டாட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி குழுவில் மெட்ரிகுலேஷன் பள்ளி வாகனங்கள் சோதனை செய்யப்படுகின்றன என்றும் துறை தெரிவித்தது. மேலும் பள்ளி வாகனங்களில் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக அளிக்கப்படும் புகார்களின் மீது துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்றும் குழு அறிய விரும்பியது.

128. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர், மண்டலப் போக்குவரத்து அலுவலர், காவல்துறை அலுவலர் ஆகியோருக்கு சுற்றறிக்கை அனுப்பி கூட்டம் நடத்தப்படும் என்றும், அறிவுறுத்தப்படுகிறது புகாரின் பேரில் காவல் துறையால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவிற்கு தெரிவித்தார்.

129. பள்ளி மாணவ/மாணவியரின் உயிர் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு காவல் துறையினால் நடவடிக்கையினை மேற்கொள்வதோடு 22.10.2012 ஆம் நாளிட்ட பள்ளிக்கல்வித் (எக்ஸ்.2) துறையின் அரசாணை எண்.270ல் பள்ளி மாணவ/மாணவிகளின் பாதுகாப்பிற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளதால் துறை ரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம் என்று குழு கருதுகிறது.

130. இத்தகைய துறை ரீதியான நடவடிக்கையினை தற்போது மேற்கொள்ளப்படுகிறதா என்றும், அவ்வாறு மேற்கொள்ளாத நேர்வில் இதனை குழுவின் கருத்து என கருதி துறை பரிசீலிக்கலாம் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. இதன் தொடர்பாக துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

XXII. பள்ளிகளில் உள்ள நீச்சல் குளங்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள் உருவாக்குதல்

131. பள்ளிகளில் உள்ள நீச்சல் குளங்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள் உருவாக்குவற்கான பணிகள் நடைபெற்று வருவதாக குழு அறிந்தது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

132. அதற்கு துறையின் பள்ளிக் கல்வி இயக்குநர் அலகில், செயல்படும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலை/ உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் சுயநிதி மேல் நிலை/ உயர்நிலை பள்ளிகளுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் தொடர்பான கருத்துருக்களை பரிசீலிக்கும்போது, அப்பள்ளிகளின் வளாகத்தில் நீச்சல் குளம் அமைக்கப்பட்டிருப்பின் அத்தகைய கருத்துருக்கள் ஏற்கப்படாமல் நிராகரிக்கப்படுகின்றன என்றும், துறை தெரிவித்தது. மேலும், சுயநிதி, தனியார் பள்ளிகளில் நீச்சல் குளம் அமைத்தல் குறித்த நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் குறித்த நடவடிக்கைகள் மெட்ரிக் பள்ளி இயக்குநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் துறை தெரிவித்தது.

133. துறை தெரிவித்தது போல், சுயநிதி, தனியார் பள்ளிகளில் நீச்சல் குளம் அமைத்தலுக்கான ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கையினை ஒரு வரையறையினை நிர்ணயித்து அப்பணியினை முடிக்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. ஒழுங்குபடுத்துதல் பணியினை மேற்கொண்ட பிறகு அதனை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XXIII. பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில் நுட்பத் திட்டம்

134. பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில் நுட்பத் திட்டம் என்கிற திட்டத்தினை 2013–2014 ஆம் ஆண்டு, முதல் துவங்கப்பட்டு அதனை ஒரு முன்னோடி திட்டமாக, செயல்படுத்த, விழுப்புரம் மாவட்டத்தை தேர்வு செய்து அதற்காக ரூ.10.03கோடி செலவில் 1329 தொடக்க பள்ளிகளில் தனியாக கணினிகளை அமைப்பதற்கான பணி குறித்து குழு அறிய விரும்பியது.

135. குழு கோரியதற்கு, துறை பள்ளிகளுக்கான தகவல் தொடர்புத் தொழில் நுட்பத் திட்டம் 2013–2014 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு அதனை ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்த, விழுப்புரம் மாவட்டத்தை தேர்வு செய்து அதற்காக ரூ.10.03 கோடி செலவில் 1329 தொடக்கப்பள்ளிகளில் தனியாக கணினிகளை அமைப்பதற்கும் கணினி பல்லூடக ஒளிஉறிவுக் கருவி மற்றும் சாதனங்கள் வழங்கப்படும் என்றும், இத்திட்டத்தின் மூலம் 95470 மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும், துறை தெரிவித்தது போல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், 2014–2015 ஆம் கல்வியாண்டில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பள்ளிகளில் ஆய்வு செய்து இதர மாவட்டங்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளளது என்றும் துறை தெரிவித்தது.

136. துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இத்திட்டத்தினை இதர மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXIV. மாணவர்களிடையே காணப்படும் பார்வை குறைபாடுகளை பரிசோதனை செய்தல்

137. 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்களிடையே காணப்படும் பார்வை குறைபாடுகளை பரிசோதனை செய்து தேவையான உதவிகள், உபகரணங்கள், வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும், 7 மாவட்டங்களில் மூளை காய்ச்சல் பற்றிய விழுப்புணர்வு ஏற்படுத்தவும், மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பு ஊசிகள் போடவும், திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அப்பணிக்காக ரூ.25.36 கோடி நிதி அடுத்த கல்வியாண்டிற்காக ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளதா என்றும், பயன் அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, செலவு செய்யப்பட்ட தொகை குறித்தும் குழு அறிய விரும்பியது.

138. 2013–2014 கல்வி ஆண்டில் மாணவர்களிடையே காணப்படும் பார்வை குறைபாடுகளை கண்டறிந்து மதிப்பீடு செய்ய " Sight Savers" என்னும் தேசிய அளவிலான தொண்டு நிறுவனத்துடன் இணைந்து முதலில் 7 மாவட்டங்களில் (விழுப்புரம், மதுரை, சேலம், நீலகிரி, நாமக்கல், இராமநாதபுரம், தேனி) முன்னோட்ட செயல்பாடாக (Pilot Study) மேற்கொள்ளப்பட்டது என்றும்,அதன்படி, 1568 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது என்றும், மேலும் 423 மாணவர்களுக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டது என்றும், அதன் தொடர் நடவடிக்கையாக அனைத்து மாவட்டங்களிலும் பார்வை குறைபாடு மதிப்பீடு செய்தல் சார்ந்து 3000 பள்ளி ஆசிரியர்கள் மற்றும் 3000 பெற்றோர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது என்றும், 2013–2014 ஆம் ஆண்டில் 7448 பார்வைத் திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டது என்றும் துறை தெரிவித்தது.

139. மேலும், முற்றிலும் பார்வையிழந்த மாணவர்களுக்கு Primary Kit மற்றும் Secondary Kit தொடக்கக் கல்வித் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது என்றும், 2013–2014 ஆம் ஆண்டில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு இலவசமாக தடுப்பூசிகள் போடப்பட்டு அக்குழந்தைகளின் மனவளர்ச்சி குன்றாமல் பாதுகாப்பதற்காக ஐந்து (தஞ்சாவூர், மதுரை, திருவாரூர், கரூர் மற்றும் விழுப்புரம்) மாவட்டங்களில் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம்கள் மக்கள் நல்வாழ்வு துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், மேற்படி பணிக்காக 2013–2014ஆம் ஆண்டில் ரூ.3.731 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்றும் துறை தெரிவித்தது.

140. மேலும், சிறப்பாசிரியர்கள் மற்றும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து நடத்திய கணக்கெடுப்பு மூலம் 358 குழந்தைகள் மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது என்றும், மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக இலவசமாக தடுப்பூசிகள் போடப்பட்டு 299 மாணவர்கள் பள்ளிலும், 12 மாணவர்கள் இல்லம் சார்ந்த கல்வியிலும் 47 மாணவர்கள் பள்ளி ஆயுத்த பயிற்சி முகாம்கள் மூலமா பயனடைந்து வருகின்றனர் என்றும் துறை தெரிவித்தது.

XXV. மாநில ஆதார வளமையத்தின் செயல்பாடு

141. மாநில ஆதார வளமையத்தின் செயல்பாடு, மேற்கொள்ளப்படும் பணிகள் இதர துறைகளின் பங்கு, இதுவரை மையத்தால் செயல்படுத்தப்பட்ட பள்ளிகள் குறித்து குழு அறிய விரும்பியது.

142. குழு கோரிய தகவலுக்கு, துறை மாநில அரசு அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் மூலமாக கண் பார்வை குறைபாடு, பார்வையற்றோர், காது கேளாதோர், செவித்திறன் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியோர், மனநோய், மூளை முடக்கு வாதம், புற உலக சிந்தனை இல்லாமை, பல்வகை ஊனமுற்றோர். ஆகிய குறைபாடுடைய குழந்தைகளுக்கு சிறப்பான முறையில் உள்ளடங்கிய கல்வி வழங்கி வருகிறது என்றும், இக்கல்வியை சிறப்பிக்கும் விதமாக, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆதாரவள மையம் ரூ.16,30,400/– செலவில், சென்னை சாந்தோமில் உள்ள நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இம்மையத்தின் மூலமாக 834 மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் 1234 மாற்றுத்திறனாளி மாணவர்களின் பெற்றோர்கள் பயனடைந்துள்ளனர்,. 2013–2014 ஆம் ஆண்டில் ரு.10 இலட்சம் செலவில் உதவி உபகரணங்கள் மற்றும் பயிற்சி சார்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு குழந்தைகளின் பயன்பாட்டில் உள்ளது. இம்மையத்தின் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு

1. இயலாமையின் அளவு மதிப்பிடுதல்
2. தேவையான கலந்தாலோசனை வழங்குதல்
3. உதவிகளை திட்டமிட்டு அளித்தல்
4. பயிற்சி மற்றும் தேவையான உதவி உபகரணங்களை வழங்குதல்
5. இயலாமையில் இருந்து மீள தேவையான உதவி அளித்தல்
6. வாழ்வாதாரத்தை வலுப்படுத்துதல்
7. ஆவணங்களை தொகுத்தல்
8. தசை பயிற்சி
9. இயண்முறை மருத்துவம்
10. பேச்சு பயிற்சி

143. ஆகிய சிறப்பு செயல்பாடுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது என துறை தெரிவித்தது.

XXVI. மழலையர் முப்பருவக் கல்வி (ECCE) திட்டத்தின் தரம் உயர்த்தப்பட்ட அங்கன்வாடி மையங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை

144. மழலையர் முப்பருவக் கல்வி (ECCE) ன் கீழ் ரூ.3.81 கோடி செலவில் 2012–2013 ஆம் ஆண்டில் 4800 தரம் உயர்த்தப்பட்ட அங்கன்வாடி மையங்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் அடங்கிய தொகுப்பு (Play Kits) வழங்கப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 160 தரம் உயர்த்தப்பட்ட அங்கன்வாடி மையங்கள் வீதம் 30 மாவட்டங்களுக்கும் மொத்தம் 4800 மையங்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், 4800 அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒடி விளையாடு பாப்பா பாடத் திட்டத்தோடு தொடர்புடைய விளையாடிக் கற்போம் தலைப்பில் உள்ள செயல்பாடுகள் வகுப்பறையில் எவ்வாறு பயன்படுத்துவது போன்ற பணியாளர்களுக்கான கையேடு வழங்கப்பட்டுள்ளது என்றும், விளையாட்டுப் பொருள்களை மாணவர்கள் ஆர்வமாக எடுத்துப் பயன்படுத்தி வருகின்றார்கள் என்றும் துறை தெரிவித்தது. மேலும் விளையாட்டுப் பொருள்கள் அடங்கிய தொகுப்பில் பின்வரும் பொருள்களை உள்ளடங்கியதாகும்.

1. Alphabet & Number Slotter
2. 3-Dimentional shape slotter
3. Lacing aid-Shoe lace
4. Jig saw-Animal & Tree
5. Moving Shapes & Matching frame

6. Abacus
7. Plastic beads of various shapes
8. Building Blocks
9. Kitchen Items
10. Sorting & Sequencing frame
11. Geo Board
12. Stacking Cubes
13. Pictures with matching wooden pieces

XXVII. இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ மாணவியர் மத்தியில் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

145. இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ, மாணவியர் மத்தியில் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதைப் பாவலாக்குதல் பணியினை துறையால் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்றும், இதில் இதர துறைகளின் பங்கு என்ன என்றும் குழு அறிய விரும்பியது.

146. குழு கோரிய விவரங்களுக்கு துறை மாணவ/ மாணவியர் மத்தியில் உடல் நலம் குறித்து ஒவ்வொரு பள்ளியிலும் உடற்கல்வி ஆசிரியர்களால் விளையாட்டு மற்றும் யோகா பயிற்சிகள் மூலம் எடுத்துரைக்கப்படுகிறது என்றும், ஒவ்வொரு நாளும் மதிய உணவு இடைவேளைக்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாக அனைத்து பள்ளிகளிலும் 15 நிமிடங்கள் யோகா மற்றும் எளிய உடற்பயிற்சிகளை மாணவர்கள் செய்து வருகின்றனர் என்றும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் மேம்படுத்தப்பட்ட பள்ளி சுகாதார திட்டத்தின் (Modified School Health Programme) மூலம் அனைத்து பள்ளிகளுக்கும் அருகில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவர்கள் மூலம் மாணவர்களுக்கு உடல்நலம் குறித்து ஒவ்வொரு ஆண்டிலும் மருத்துவ ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், கண்ணொளி காப்போம் திட்டத்தின் மூலம் பார்வை குறைபாடு உள்ள மாணவ/மாணவியருக்கு பள்ளி வளாகத்திலேயே கண்டறிந்து அரசின் விலையில்லா கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

147. மேலும், மக்கள் நல்வாழ்வுத் துறை, பள்ளிக் கல்வித் துறையின் முழு ஒத்துழைப்புடன் ஒவ்வொரு ஆண்டும் மாணவ/மாணவியருக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் மற்றும் இரும்புசத்து மாத்திரைகளை வழங்கி வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

148. மேலும், பள்ளிக் கல்வித் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் ஒருங்கிணைந்து மாணவ/மாணவியருக்கு உடல்நலம் பற்றிய பல் பாதுகாப்பு, அயோடின் குறைபாடு, இரத்த சோகை, புகையினை. பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் ஆகியவை குறித்து விழிப்புணர்வு முகாம் மற்றும் பேரணிகளை பள்ளி அளவிலும் மாவட்ட அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது என்றும் ஒவ்வொரு பள்ளியிலும் அமைக்கப்பட்டுள்ள செஞ்சுருள் (Red Ribbon Club) சங்கத்தின் மூலமும், பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியல் வளரிளம் பருவத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வினை வழங்கும் வகையில் அவர்களுக்கு வாழ்வியல் திறன் கல்வி மூலம் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது என்றும் துறை தெரிவித்தது.

XXVIII. தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கான கல்வி கட்டணத்தை ஒழுங்குபடுத்தல்

149. தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கான கல்வி கட்டணத்தை ஒழுங்குபடுத்தல் பணி நடைபெற்று வருவதாகவும், அப்பணி ஜூன் 2013 இறுதிக்குள் நிறைவடையும் என துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

150. தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகளுக்கான கட்டணங்களை நிர்ணயிக்கும் இக் குழு, 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் கல்வி ஆண்டுக்களுக்கான கட்டணங்களை இதுநாள் வரை நிர்ணயித்த விவரம் பின்வருமாறு

1. மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை சுமார் 10,000 என்றும்,
2. புதிதாக துவக்கப்பட்ட பள்ளிகளின் மற்றும் விட்டுப்போன பள்ளிகளின் கட்டண நிரணயம் செய்யும் பணி நடைபெற்று வருகின்றது என்றும்,
3. ஆட்சேபணை தாக்கல் செய்த பள்ளிகளின் எண்ணிக்கை 432 என்றும் அதன் மீது விரிவான விசாரணை நடத்தி, தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன என்றும்,
4. இதுவரை பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மீது உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து அவை மீண்டும் மறுபரிசீலனைக்கு உத்தரவாகி அதன்படி விசாரணைக்குட்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும்,
5. 2014–2015 ஆண்டில் முடிவுறும் பள்ளிகளின் கட்டண நிர்ணயம் 6.8.2014 முதல் மார்ச் 2015 வரை நடைபெற உள்ளது. அப்பள்ளிகளின் எண்ணிக்கை 530 என்றும்,
6. 2013–2014 முதல் 2015–2016 வரை கட்டண நிர்ணயம் செய்யப்பட்ட பள்ளிகளுக்கு மீண்டும் கட்டண நிர்ணயம் பணி 2015–ல் தொடங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டிய பள்ளிகள் எண்ணிக்கை சுமார் 10,000 என்றும்,

151. அதிக கட்டணம் குறித்து பெறப்படும் புகார் மனுக்களையும் இக்குழு விசாரித்து தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்றும், குழுவின் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் துறை தெரிவித்தது.

XXIX. 2013–2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்பு வசதிகள்

152. 2013–2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்பு வசதிகள் குறித்து குழு அறிய விரும்பியது.

153. 2013–2014 ஆம் ஆண்டில் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் 210 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், குடிநீர், சுற்றுசுவர் மற்றும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தி தருவதற்கு நபார்டு நிதி உதவியுடன் கூடிய திட்டம் ரூ.247 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும், அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும் என்றும் துறை தெரிவித்தது.

154. நிருவாக ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளில், அவற்றின் மதிப்பீட்டுடன் குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XXX. மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு பயிற்சி

155. மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் குறித்து விரிவாக குழு அறிய விரும்பியது.

156. குழு கோரியதற்கு துறை **2013–2014** ஆம் ஆண்டில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளைக் கண்டறிவதற்காக சிறப்பாசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் தன்னார்வளர்கள் இணைந்து ஏப்ரல்2013 மற்றும் மே2013 ஆகிய இரண்டு மாதங்களில் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டு மொத்தம் **1,49,214** மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டனர் என்றும் அவர்களின் **1,35,299** குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அதிகமான இயலாத் தன்மை கொண்ட **13,915** குழந்தைகள் வீட்டுவழிக் கல்வியின் மூலம் பயனடைந்து வருகின்றனர் என்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை பரிசோதனை செய்து உதவி உபகரணங்கள் வழங்க மற்றும் அறுவை சிகிச்சை செய்வதற்காக மருத்துவ மதிப்பீட்டு முகாம்கள் அனைத்து வட்டாரங்களிலும் நடத்தப்பட்டது என்றும் மேற்காண் மருத்துவ முகாம்கள் மூலமாக **12,664** குழந்தைகளுக்கு உதவி உபகரணங்களும் **10,253** குழந்தைகளுக்கு தேசிய அடையாள அட்டையும் **162** குழந்தைகளுக்கு அன்னப் பிளவு மற்றும் மேலுதட்டு பிளவு அறுவை சிகிச்சையும், **760** குழந்தைகளுக்கு பிற அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

157. உடல் இயக்க குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பிசியோதெரப்பி சிகிச்சை அளிப்பதற்காகவும், செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பேச்சுப் பயிற்சி அளிப்பதற்காகவும் **412** ஆதார வள மையங்கள் மற்றும் **392** பகல் நேரப் பாதுகாப்பு மையங்கள் இயங்கி வருகிறது என்றும் **151** தசைப் பயிற்றுநர்கள் மற்றும் **17 Occuption therapist** பணியிபுரிந்து வருகின்றனர் என்றும் **9980** பல்வேறு மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர் என்றும் துறை தெரிவித்தது.

158. 2013–2014 ஆம் ஆண்டில் உள்ளடக்கிய கல்வி திட்டத்திற்காக **2541.23** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் **31.03.2014** வரை **2498.4** இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது **(98.31%)** என்று துறை தெரிவித்தது.

XXXI. மாநில மற்றும் மத்திய அரசுகளினால் அமைக்கப்படும் அறிவுசார் பள்ளிகள்

159. அறிவுசார் பள்ளிகள் என்கிற தலைப்பின் கீழ் **2012–2013** ஆம் ஆண்டு **5** அறிவுசார் பள்ளிகளுக்கு மாநில அரசுத் திட்டத்தின் கீழ் **1.25** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருச்செந்துரை, அயிலாப்பேட்டை, எட்டரை, சேமரசன்பேட்டை மற்றும் இனாம்குளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவுசார் வகுப்புகளும், **2012–2013** ஆம் ஆண்டில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் ரூ.**1.25** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நாமக்கல் மாவட்டம், ஆர்.புதூர் பாளையத்திலும், தேனி மாவட்டம் பெரியகுளத்திலும், விருதுநகர் மாவட்டம் வீரசோழனிலும், திண்டுக்கல் மாவட்டம் பழனியிலும் மற்றும் மதுரை மாவட்டம், மேலூரிலும் , அரசுப் பள்ளிகளில் அறிவுசார் பள்ளி உருவாக்கி, உரிமையாக்கி, இயக்கி மாற்றுதல் மாதிரியின் (Boot) அடிப்படையில் **5** ஆண்டுகளுக்கு இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருவதாகம் குழு அறிகிறது. துறையால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடு குறித்து குழு அறிய விரும்பியது.

160. குழு கோரியதற்கு, துறை அறிவுசார் வகுப்புகள் முதல் முறையாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஐந்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படவுள்ளது என்றும், தற்போது அரசின் அனுமதி மற்றும் நிதி பெற்றவுடன் செயல்படுத்தப்படவுள்ளது என்றும், திட்டத்தின் வெற்றியினை பொறுத்து இதர பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது என்றும் தெரிவித்தது.

161. மேலும், மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டம் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்பு 75:25 என்கிற விகிதத்தில் மேற்படி திட்டத்தினை செயல்படுத்தப்படவுள்ளது என்றும், தற்போது அரசின் அனுமதி மற்றும் நிதி பெற்றவுடன் செயல்படுத்தப்படும் என்றும் துறை தெரிவித்தது.

162. குழு, துறையால் அளிக்கப்பட்ட அறிக்கையில் பள்ளி கல்வித் துறையின் 2012–2013 ஆம் ஆண்டு திட்டத்தினை (Annual Plan) குழு பார்வையிட்டபோது அறிவுசார் பள்ளிகள் (Smart Class) என்கிற திட்டத்தின் கீழ் 2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டும், 31.3.2013 வரை துறையால் செலவினம் ஏதும் செய்யப்படவில்லை என்றும், அதே போல், 2013–2014 ஆம் ஆண்டிலும் மேற்படி திட்டத்தின் கீழ் 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் எதுவும் செய்யப்படவில்லை என்றும் குழு அறிந்தது.

163. இது குறித்து துறையின் கருத்தினை குழு கேட்டறிந்தபோது துறையின் அரசு முதன்மைச் செயலாளர் எந்த திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை அத்திட்டத்திற்காக செலவு செய்து வருவதாக குழுவிடம் தகவல் தெரிவித்தார்.

164. துறை மேற்படி திட்டத்திற்கான நிதி செலவினம் குறித்தும் மற்றும் அதன் தொடர் நடவடிக்கை குறித்தும் குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் பரிந்துரை செய்கிறது.

165. மேலும், துறை அளித்த அறிக்கையில் 2013–2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டு திட்டத்தினை பார்வையிட்ட போது நிலவரைப்படம் (Map to schools) பள்ளிகளுக்கு வழங்குவதற்காக ரூ.3.76 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என குழு அறிந்தது. எனினும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 31.3.2014 வரை செலவினம் ஏதுவும் செய்யப்படவில்லை என்றே குழு அறிந்தது.

166. நிதி ஆண்டு முழுவதும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் செலவினம் ஏதுவும் மேற்கொள்ளாமல் துறை ஏன் நிதி ஒதுக்கீடு கோரியது என்பது குழுவிற்கு வியப்பாக இருந்தது.

167. எனவே, இது தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XXXII குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் வரையறுக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு அருகே பள்ளிகள் அமைத்தல்.

168. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ல் வரையறுக்கப்பட்டபடி குடியிருப்புகளுக்கு அருகே உள்ள பள்ளிகள் குறித்த இடைவெளியை அளவிட புவியியல் தகவல் முறைமை உதவுகிறது என்றும் அதன்படி 100% சேர்க்கை உறுதி செய்யும் பொருட்டு படிப்படியாக புதிய தொடக்க நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகள் ஏற்படுத்தப்படுத்தப்படவுள்ளது என குழு அறிந்ததது. துறை தெரிவித்தது போல் சென்ற நிதியாண்டிலும் இந்த நிதியாண்டிலும் தொடங்கப்பட்ட/ தொடங்கப்படவுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை குறித்தும் குழு அறிய விரும்புகிறது.

169. 2012–2013 நிதியாண்டில் புவியியல் தகவல் முறையை மூலம் 732 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளி வசதியை ஏற்படுத்த தகுதியான குடியிருப்புகள் என்றும், 330 குடியிருப்புகளில் உள்ள தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த தகுதியானவை என்றும் கண்டறியப்பட்டது. இவைகளில் 213 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளி துவங்கவும், 142 தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தவும் கருத்துருக்கள் கடந்த நிதியாண்டில் மத்திய வரவு– செலவுத் திட்டத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது என்றும், புதிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகள் ஏதுவும் கடந்த மத்திய வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படவில்லை என்றும் துறை தெரிவித்தது.

XXXIII. 2013–2014 நிதியாண்டில் தொடக்கப் பள்ளிகளை துவங்குதல்

170. இந்த நிதியாண்டில் 488 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளி வசதிகளை ஏற்படுத்த தகுதியான குடியிருப்புகள் என்றும் 211 குடியிருப்புகள் தொடக்கபள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த தகுதியானவை என்று கண்டறியப்பட்டுள்ளது என்றும் 88 குடியிருப்புகளில் உள்ள தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தவும் கருத்துகள் வரப்பெற்று இந்த ஆண்டு மத்திய வரவு–செலவு திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் குடியிருப்புகளில் 128 புதிய தொடக்கப்பள்ளிகளும் 42 தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தவும் வழி வகை செய்யப்படுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

171. தமிழகத்தில் பெரும்பாலும் அரசு உயர்நிலைப் பள்ளிகள் கிராமப் பகுதியில் உள்ளதால் இப்பள்ளிகளில் 10–ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் மேல் வகுப்பினை தொடர முடியாத நிலையில் அவர்களின் படிப்பினை இடையிலேயே நிறுத்திவிடும் சூழ்நிலை ஏற்படுகிறது என்றும், அரசு உயர்நிலைப்பள்ளிகள் பெரும்பாலானவை பிற்படுத்தப்பட்டமிகவும் பிற்படுத்தப்பட்ட / ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் பயிலும் பகுதியிலேயே அமைந்துள்ளது என்றும், மேல்நிலைகல்வி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு முதல் ஒவ்வொரு கல்வி ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன என்றும் துறை தெரிவித்தது.

172. 2011–2012 கல்வி ஆண்டில் 100 பள்ளிகளும் 2012–2013 கல்வி ஆண்டில் 100 பள்ளிகளும் 2013–2014 கல்வி ஆண்டில் 100 பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்றும். 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் 100 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு ஒரு பள்ளிக்கு ஒன்பது முதுகலை ஆசிரியர் பணியிடம் வீதம் மொத்தம் 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

173. ஆரம்ப பள்ளி துவங்க வேண்டுமென்றால் குறைந்த பட்சம் எத்தனை மாணவர் இருக்க வேண்டுமென குழு துறையிடம் அறிய விரும்பியது.

174. அதற்கு, அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் மாநில திட்ட இயக்குநர் 488 குடியிருப்புகளும் 25 மாணவர்களும் இருக்க வேண்மென்று குழுவிற்கு தெரிவித்தார்.

175. மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் பெரும்பாக்கம் கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி துவங்குவது குறித்து குழு விவாதித்தது.

176. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர், பெரும்பாக்கம் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 1/2 ஏக்கர் நிலமும் இரண்டு அரசு உயர்நிலைப்பள்ளிகள் துவங்க ஏதுவாக தலா ஒரு ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த இடம் குடியிருப்பு பகுதிகளுக்கு நடுவில் உள்ளது என்றும் குடிசை மாற்று வாரியத்தால் சுமார் 25,000 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது என்றும், இதில் 3936 மற்றும் 1502 குடியிருப்புகளை ஜூன் மாதம் 2014–ல் பயனாளிகளுக்கு ஒதுக்க உள்ளதாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் வெகு விரைவில் காஞ்சிபுரம் முதன்மை கல்வி அலுவலருக்கு ஒப்படைக்கப்படும் எனவும் குடிசை மாற்று வாரியத்தால் தெரிவிக்கப்பட்டதாக துறை தெரிவித்தது.

177. மேலும், இருபாலர் துவக்கப் பள்ளி ஒன்றும் மாணவியர்களுக்குகென தனியாக ஒரு உயர்நிலைப் பள்ளியும் சிறப்பு நிகழ்வாக புதிதாக துவங்கினால் புதிதாக குடியேறும் பயனாளிகள் பிள்ளைகள் பயன்பெறுவார்கள் என்றும், இவ்வாறு துவக்கப்படும் புதிய துவக்கப்பள்ளி அனைவரும் கல்வித் திட்டத்தின் மூலம் புதிய உயர்நிலைப்பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் மூலமும் புதிய வகுப்பறைகள் இதர வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை உடன் எடுத்து வருவதாகவும் துறை தெரிவித்தது.

178. குழு அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறித்து விவாதிக்கப்பட்டது. அப்போது துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமில்லாமல் தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் அரசின் சார்பாக அவர்களின் கல்வியினை நல்ல முறையில் தொடர்வதற்காக பள்ளிக்கு செல்வதற்கு அரசுப் பேருந்து இலவச பயண அட்டை வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

XXXIV. அரசு உதவி பெரும் பள்ளிகளின் நிருவாகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அப்பள்ளிகளை அரசே ஏற்று நடத்துதல்.

179. அரசு உதவி பெரும் பள்ளிகளில் ஏற்படும் நிருவாக பிரச்சினைகளின் காரணமாக மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாவதாக குழுவின் சார்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

180. குழு, கோரிய விவாதத்திற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு இணையாக அரசால் நடத்தப்படும் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதற்காக, 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி அரசுப் பள்ளிகளிலும் தேவைக்கேற்ப ஆசிரியர்களை நியமித்து நல்ல முறையில் பயிற்சி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், துறையால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மாணவர்களைக் கணக்கிட்டு ஆசிரியர்களை நியமிக்கப்படுவதாகவும், மேற்படி திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தியதாகவும் அவ்வாறு உயர்நிலைப் பள்ளிகளில் உபரியாக இருக்கும் ஆசிரியர்களை அரசின் கல்வித் திட்டத்தில் கூட CCE Methodology ன்கீழ் கொண்டு வந்தால் அவர்கள் எண்ணம் சமமாகிவிடும் என்றும் தெரிவித்தார்.

181. மேலும், இதன் தொடர்பாக அரசு நிதியுதவி பெறும் பள்ளி நிருவாகத்தினரால் உயர் நீதிமன்றத்தில் 2000 வழக்குகளுக்கு மேல் தொடரப்பட்டுள்ளது. அவ்வழக்குகளின் மீது துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் உதாரணமாக ஒரு பள்ளியின் நிருவாகத்தில் இரண்டு சகோதரர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும் அதன் காரணமாக அவர்கள் நீதிமன்றம் சென்ற காரணத்தால் ஏற்பட்ட பேச்சு வார்த்தை ஒருபக்கம் ஆனால் உண்மை இன்னொரு பக்கம் என்றும், பள்ளிகளை நல்ல முறையில் நடுத்துவதற்கு இவ்வாறு பலதரப்பட்ட இடையூறுகள் ஏற்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

182. அதற்கு, குழு துறை ரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிய விரும்பியது.

183. குழு ,கோரியதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் நிருவாகத்தில் கருத்து வேறுபாடு உள்ள பள்ளிகளை ஆய்வு செய்து முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் பேரில் அரசே ஏற்று நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

184. துறையின் அரசு முதன்மைச் செயலார் அவர்களின் கருத்திற்கு குழு அரசு ஏற்று நடத்தினால்தான் இதற்கு ஒரு நல்ல தீர்வாக இருக்கும் என தெரிவித்தது. மாணவர்களின் கல்வியினை கருத்தில் கொண்டு அரசு உதவி பெறும் பள்ளிகளில் துறை ரீதியான ஆய்வினை மேற்கொண்டு நிருவாகத்தில் பிரச்சனைகள் உள்ள பள்ளிகளை அரசே ஏற்று நடத்தப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

185. துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்த கருத்திற்கு இத்திட்டத்தினை கிராமங்களில் நடைமுறைப்படுத்துவதோடு அதனை மக்களிடம் எடுத்து செல்வதற்கு விளம்பரம் செய்தால் மட்டுமே துறை எண்ணிய வெற்றி கிடைக்கும் என்பதால் கிராமங்களில் இது குறித்து விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் குழு சார்பாக தெரிவிக்கப்பட்டது.

186. குழுவின் கருத்திற்கு அரசின் முதன்மைச் செயலாளர் இதுகுறித்த துறை ரீதியாக நடவடிக்கையினை மேற்கொள்வதாக குழுவிற்கு தெரிவித்தார்.

187. மாணவர்கள் தமது கல்வியினை நல்ல முறையில் மேற்கொள்வதற்காக அரசினால் இலவச பயண அட்டை வழங்கப்படுகிறது என்பதனை கிராமங்களில் உரிய விளம்பரம் செய்யப்பட வேண்டுமென்பதை குழு பரிந்துரை செய்கிறது.

188. மேலும், குழு மலைப்பகுதியில் குழந்தைகளுக்கு பாதுகாப்பு கொடுப்பது பாராட்டுக்குரியது என்றும் பள்ளி ஆசிரியர்கள் பள்ளிக்கு சென்று சேருவதற்கு மிகவும் இன்னலுக்கு உள்ளாகிறார்கள் என்றும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்ட போது திடீர் ஆய்வாக ஒர் தொடக்கப்பள்ளியில் இரண்டு மணி நேரம் ஆய்வு செய்தது. அப்போது ஒர் ஆசிரியர் படகில் மிகுந்த கடமை உணர்வோடு பாடம் நடத்திக் கொண்டிருப்பதை குழு பார்வையிட்டது. அப்போது அந்த ஆசிரியர் இராமநாதபுரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு ஒரு படகில் பள்ளிக்கு செல்ல வேண்டி உள்ளது என்றும் பேரூந்து வசதி ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என குழுவிடம் கோரிக்கை வைத்தார். அப்பள்ளியில் ஒரு மாற்றுத் திறனாளி ஆசிரியரும் உள்ளார் என்றும் குழு அறிந்தது. குழு இதனை ஒரு சிறப்பு நேர்வாக எடுத்துக் கொண்டு போக்குவரத்து வசதி செய்து கொடுத்தால் அந்த ஆசிரியர்களும் அங்கு வருகைதரும் சுற்றுலாப் பயனிகளுக்கு நல்ல வசதியாக இருக்குமென குழு சார்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

189. குழுவின் கருத்திற்கு அரசு முதன்மைச் செயலாளர் குழுவின் இந்த நல்ல கருத்தினை துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமென்று குழுவிடம் தெரவித்தார்.

190. சுற்றுலா பயணிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி உரிய பேரூந்து வசதியினை ஏற்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXXV. தேசிய கல்வி வாரிய பள்ளிக்கு இணையாக தமிழக பள்ளிகளை கொண்டுவருதல்.

191. மாநில கல்வியில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவுடன் இணைந்து தமிழகப் பள்ளிகளை இதர தேசிய கல்வி வாரியம் பள்ளிகளுக்கு இணையாக்கும் வகையில் பள்ளி பாடபுத்தகங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது என துறை தெரிவித்துள்ளது. இப்பணியின் தற்போதைய நிலை என்ன என்றும், இத்திருத்தங்கள் எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்றும், திருத்தங்களை மேற்கொண்ட பிறகு ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி மாணவர்கள் பெறக்கூடிய பயன் குறித்தும் குழு அறிய விரும்பியது.

192. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அரசாணை (நிலை) எண் 203 பள்ளிக்கல்வித் (E1) துறை நாள் 9.12.2011இன் அடிப்படையில் முப்பருவ முறையை அறிமுகப்படுத்தியதை தொடர்ந்து பாட நூல்களை பருவ முறைக்கேற்ப மூன்றாக பகுத்துள்ளது என்றும் இதர தேசிய கல்வி வாரியப் பள்ளிகளுக்கு இணையாகப் பாடநூல்களை வல்லுநர்களின் கருத்துரைகளுக்கு ஏற்ப மேம்படுத்தி புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை செயல்படுத்துவதற்கேற்ப பருவ பாடநூல்களின் செயல்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன என்றும் இதன் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன என்றும் மாணவர்கள் செயல்பாடுகள் வழியாக பாடபகுதியை மகிழ்வுடன் கற்பதையும் அடைவுத்திறன் அதிகரித்துள்ளதையும் மன அழுத்தமும் தேர்வு பயமும் இன்றி மதிப்பீட்டை எதிர்கொள்வதையும் கல்வி மேற்பார்வை அலுவலர்களால் அறியப்பட்டுள்ளது என்கிற தகவலை துறையால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

XXXVI. தொழிற் கல்விக்கான உயர்மட்டக் குழு அறிக்கையின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்ட தொழில்கல்வி பிரிவுகள்.

193. தொழிற் கல்விக்கான உயர்மட்டக் குழு அறிக்கையின் அடிப்படையில் 2010–2011 ஆண்டு முதல் தொழிற் கல்வி திருத்தி அமைக்கப்பட்டு 12 தொழிற் கல்விப் பிரிவுகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன என்றும் அரசு வரும் ஆண்டுகளில் மேலும் புதிய தொழிற் கல்வி பிரிவுகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது என குழு அறிந்தது. தொழிற்கல்வி பிரிவுகள் யாவை என்றும் இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட பிரிவுகள் யாவை என்றும் மாணவர்கள்/மாணவியர்கள் தம்மேல் நிலைப் பள்ளியினை முடித்தபின் துறையால் வேலைவாய்ப்பு/மேல் படிப்பிற்கு ஏதேனும் உதவி செய்யப்படுகிறதா என குழு அறிய விரும்பியது.

194. அரசாணை நிலை எண் 277 பள்ளிக்கல்வி (விஇ) துறை நாள்.26.10.2009 மற்றும் அரசாணை நிலை எண் 78 பள்ளிக்கல்வி (விஇ) துறை நாள்.28.4.2011ன்படி மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி பாட பிரிவுகள் 2010–2011ஆம் கல்வியாண்டு முதல் திருத்தி அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட பாட பிரிவுகள் செயல்பட்டு வருகிறது.

1. பொது இயந்திரவியல் (General Mechanist)
2. மின் இயந்திரங்களும் சாதனங்களும் (Electrical Mechines and Appliances)
3. மின்னணு சாதனங்கள் (Electronic Equipments)
4. துணிகளும் ஆடை வடிவமைத்தலும் (Textiles and Dress Desigining)
5. வேளாண் செயல் முறைகள் (Agricultural Practices)
6. உணவு மேலாண்மையும், குழந்தை நலனும் (Food Management and Child care)
7. செவிலியர் துறை (Nursing)
8. கட்டடப் பட வரைவாளர் (Draughtsman Civil)
9. அலுவலக மேலாண்மை (Office Secretaryship)
10. ஆட்டோ மெக்கானிக் (Auto Mechanic)
11. நூற்பாலை தொழில்நுட்பம் (Textile Technology)
12. கணக்கியலும், தணிக்கையியலும் (Accountacy and Auditing)

195. மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற் கல்வி மேல்நிலை படிப்பினை முடித்தபின்னர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் முலமாக கல்வித்தகுதியின் அடிப்படையில் புதிய வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்றும், மேல்நிலைப்பள்ளிகளில் பொது இயந்திரவியல் (General Mechinist) தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயிலும் மாணவ / மாணவியருக்கு உரிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் பொறியியல் உயர்கல்வி பயில பெரிதும் பயனடைந்து வருகின்றனர் என்றும், தொழிற்கல்வி பாடபிரிவில் பயிலும் மாணவ/மாணவியருக்கு உயர்கல்வி பயில குறிப்பிட்ட சதவிகித ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

XXXVII. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை

196. பெண்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த பெண்களுக்கு வழங்கப்பட்ட தொகை மற்றும் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கையை குழு அறிய விரும்பியது.

197. மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் மற்றும் உள்ளுர் அமைப்பு (Local body) பள்ளிகளில் கல்வி பயிலும் 9ஆம் வகுப்பு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவிகளின் கல்வித்தரத்தை ஊக்குவிக்க செய்யும் வகையில் ஒவ்வொரு மாணவிகளுக்கும் ரூ. 3000/– வீதம் வங்கியில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு 18 வயது பூர்த்தியடையும் பொழுது சம்மந்தப்பட்ட மாணவியின் வங்கி சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படும். (18 வயது பூர்த்தியடையும் தருவாயில் அம்மாணவி திருமணம் செய்திருக்கக்கூடாது) 2012–2013

மற்றும் 2013–2014 கல்வி ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு தொகை அனுமதிக்கக்கோரி புதுடெல்லி, மனிதவள மேம்பாடு அமைச்சகத்திற்கு மாநில அரசு மூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

வருடம்	மொத்தப்பயனாளிகள் எண்ணிக்கை	ஒரு மாணவிக்கு அனுமதிக்கப்படும் தொகை	மொத்த தொகை	18 வயது பூர்த்தியடையும் வருடம்
2012–2013	90725	3000	27,21,75,000	2017
2013–2014	92199	3000	27,65,97,000	2018

198. துறை மத்திய அரசுக்கு அனுப்பிவைக்க கருத்துருவிற்கு விரைவில் ஒப்புதல் பெற்று பயனாளிகளுக்கு உதவி தொகையினை வழங்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXVIII. தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் நூலக வசதி ஏற்படுத்துதல்

199. 2013–2014 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளும் நூலக வசதியை மேம்படுத்த துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

200. 2013–2014 ஆம் ஆண்டு முதல் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலக வசதியை மேம்படுத்திட அரசின் அறிவுரைகளின்படி பொது நூலகத் துறையுடன் இணைந்து செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதற்கான கருத்துருவினை பொது நூலகத் துறை மூலம் அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது என துறை தெரிவித்துள்ளது.

201. மாணவர்களின் நலன் கருதி அவர்களின் படிப்பாற்றலை மேம்படுத்தும் வகையில் அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியினை ஏற்படுத்த துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXIX. புவியியல் தகவல் முறைமையை துறையால் செயல்படுத்துதல்

202. புவியியல் தகவல் முறைமையை துறையால் வெற்றிகரமாக எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும் துறையால் நிர்ணயித்த அனைத்து பணிகளையும் மேற்கொள்ளப்படுகிறதா என்றும், இப்பணியில் இதர துறைகளின் பங்களிப்பு உள்ளதா என்றும், துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

203. 2012–2013ஆம் ஆண்டில் புவியியல் தகவல் முறைமை (GIS) அடிப்படையில் பள்ளி வரைபடம் தயாரித்தல் பணி மேற்கொள்ளப்பட்டது மாநிலத்தில் புவியியல் தகவல் முறைமை ஆலோசகரை நியமனம் செய்வதற்கான தீர்மானம் செயற் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும், பள்ளி வரைபடம் தயாரித்தல் பணிக்கு முன் 2005–2006ல் மேம்படுத்தப்பட்ட புவியியல் தகவல் முறைமை தகவல் தலத்தை புதுப்பிக்க முடிவு செய்யப்பட்டது என்றும், இம்முழு பணியானது கீழ்க்கண்ட நான்கு

பகுதிகளாக பிரிக்கப்பட்டு புவியியல் தகவல் முறைமை பணியில் திடமான நிபுணத்துவம் பெற்றவரிடத்தில் ஒப்படைத்து செய்து முடிக்க முன் மொழியப்பட்டது.

1. அடிப்படை வரைபடம் தயாரித்தல்
2. குடியிருப்புகள் மற்றும் பள்ளி இடங்களை வரைபடத்தில் புதுப்பித்தல்
3. குடியிருப்புகள் மற்றும் பள்ளி வாரியான தகவல் அட்டவணைகளை வரைபடத்துடன் இணைத்தல்
4. அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளங்களுக்கான வரைபடங்களை உருவாக்குதல்

XL. அடிப்படை வரைபடம் உருவாக்குதல்

204. சென்னை நில அளவுத்துறை, இயக்குநரகத்தால் வெளியிடப்பட்ட மாநில வட்ட 1:1 மைல் வரைபடம் அடிப்படை வரைபடத்தின் மூலமாக இருந்தது என்றும், இவ்வரைபடமானது கிராம எல்லைகள், வட்டார எல்லைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளை கொண்டுள்ளது. இந்திய நில அலவைத்துறை டோபோஷிட்டை பயன்படுத்தி சாலை இணைப்புகள், நீர் ஆதாரங்கள், முக்கியமான நகர மற்றும் கிராம இடங்கள் மாவட்ட மற்றும் வட்ட எல்லைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டன என்றும், மேலும் இந்த டோபோஷிட்டானது ஜீயோ ரெப்ரன்சிங் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது என்றும், குடியிருப்புகளின் உண்மையான இடங்கள் டோபோஷிட் மற்றும் மாநில நில அலவைத்துறை வரைபடங்களிலிருந்து குறிக்கப்பட்டுள்ளது என்றும், புதிய பள்ளிகள் தொடங்குவதற்கான பகுதிகள் மற்றும் தற்போதைய பள்ளிகளின் இடங்கள் ஆகியவற்றை பற்றி தெளிவாக கண்டறிவதற்கு 52 நிரல்கள் கொண்ட படிவம், தொடக்க நிலை மற்றும் உயர் தொடக்க நிலைகளுக்கு வடிவமைக்கப்பட்டது. இப்படிவமானது கீழ் கண்ட தகவல்களை உள்ளடக்கி உள்ளது.

1. பால் மற்றும் இலவாரியான மக்கள் தொகை
2. பள்ளி வயது மக்கள் தொகை (6 முதல் 14 வயதுள்ள பிள்ளைகள்)
3. பள்ளி செல்லும் குழந்தைகள் (6 முதல் 14 வயதுடைய குழந்தைகள்)
4. சிறப்பு கவனம் தேவைப்படும் (6 முதல் 18 வயதுடைய குழந்தைகள்)
5. இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் (2009–ன்படி பள்ளிகளின் இருப்பு)
6. குடியிருப்புகளுக்கு பள்ளி வசதிகளை தரும் துவக்கப்பள்ளிகள் மற்றும் குடியிருப்புகளிலிருந்து அப்பள்ளிகள் அமைந்துள்ள தொலைவு.
7. அரசு, அரசு நிதி உதவி மற்றும் நிதி உதவி பெறாத பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை.
8. தங்கும் மற்றும் தங்கா உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையங்கள் மற்றும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) பள்ளிகளில் சேர்ந்திருக்கும் இடைநின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை, குடியிருப்புகளின் பள்ளி வசதியின் தற்போதைய நிலை.
9. புதிய பள்ளிகள் முன்மொழிவுகளுக்கான காரணங்கள்.
10. போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகள் தேவைபடும் குடியிருப்புகள்.
11. உண்டு உறைவிடப்பள்ளிகள் தேவையுள்ள குடியிருப்புகள்.
12. வெவ்வேறு துறைகளின் கீழ் இயங்கும் உண்டு உறைவிடப் பள்ளிகளின் விடுதிகள் உள்ள இடங்கள், அப்பள்ளிகளின் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை.

205. பள்ளி மற்றும் சமூக வரை தயாரித்தல் பணிக்கான பயிற்சி அனைத்து மாவட்ட ஆசிரியர் பயிற்றுநர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றும், கிராமக் கல்விக் குழு / பள்ளி மேலாண்மைக் குழு/வட்டார வள மையம்/மாவட்ட வாரியாக இக்கணக்கெடுப்பு பணியினை முடித்து தொகுத்து மாநில அளவில் முடிப்பதற்கு இரண்டு மாதம் காலம் ஆனது என்றும், இப்பணியினை துவங்குவதற்கு முன்பு ஊரக

வளர்ச்சி துறை பேரூராட்சி/நகராட்சி/மாநகராட்சி இயக்குநகரிடமிருந்து குடியிருப்புகள் அட்டவணையை பெற்று தற்போது உள்ள குடியிருப்புகளை பெறுவதற்கு அனைத்து மாவட்டங்களுக்கும் தகவல் அளிக்கப்பட்டது என்றும் பள்ளி வரைபடம் தயாரித்தல் பணியானது கீழ்கண்டவற்றை கண்டறிவதற்கு உறுதுணையாக இருந்தது.

1. அனைத்து குடியிருப்புகளிலும் பள்ளி வசதிகளின் தற்போதைய நிலை
2. புதிய தொடக்க பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் தேவைகள்
3. போக்குவரத்து, பாதுகாப்பு வசதி மற்றும் புதிய உண்டு உறைவிட பள்ளிகளின் தேவை உள்ள பள்ளி வசதியற்ற குடியிருப்புகள்
4. இயற்கை மனிதனால் உருவாக்கப்பட்ட தடைகள், சமுகத்தடை கலாச்சார மற்றும் பொருளாதார தடைகள் உள்ள பள்ளி வசதி தேவையான குடியிருப்புகள்
5. இறுதியாக இத்தகவல்கள் அனைத்தும் புவியியல் தகவல் முறைமை தகவல் தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து தேவையான பகுப்பாய்வை செய்துக் கொள்ளலாம். புவியியல் தகவல் முறைமை தகவல் தடத்தை புதுப்பிப்பதற்காக முழுமையான வரைபடம் தயாரித்தல் பணி கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது என்றும்,

1. மாநில தலைமையகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி
2. மாவட்ட தலைமையகத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி
3. பள்ளி மற்றும் சமூக வரைபடம் தயாரித்தல் பணி – குடியிருப்புகள் வாரியாக
4. மாவட்ட தலைமையகத்தில் தரவுகளை மதிப்பீடு செய்தல்
5. பள்ளி வரைபடம் தயாரித்தல் பணியின் விளைவுகளை இறுதி செய்தல்
6. மாநில அளவிலான முன்னாய்வு

விளைவுகள்

206. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கான தகவல் தலத்தை உருவாக்கி குறுந்தகட்டில் பதிவு செய்து மென் நகலாக வழங்கப்பட்டது. இக்குறுந்தகடுகளானது தனித்தனி மாவட்டத்திற்கான குடியிருப்புகள், பள்ளிகள், வெவ்வேறு வகையான கிராமங்கள், நகரங்கள், வட்டாரங்கள் சாலை இணைப்பின் வகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

207. 2012–2013ல் (GIS) பகுப்பாய்வின்படி தமிழ்நாட்டிலுள்ள 95010 குடியிருப்புகளில் 92082 குடியிருப்புகள் தொடக்க பள்ளி வசதி உள்ள குடியிருப்புகள் என்றும் 2928 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளி வசதியற்ற குடியிருப்புகள் என்றும் கண்டறியப்பட்டது. இவைகளில் 732 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளிகள் துவங்க தகுதியான குடியிருப்புகள் என்று கண்டறியப்பட்டது. இதே போல் 93293 குடியிருப்புகள் நடுநிலைப்பள்ளி வசதியுள்ள குடியிருப்புகள் என்றும் 1717 குடியிருப்புகள் நடுநிலைபள்ளியற்ற குடியிருப்புகள் என்றும் கண்டறியப்பட்டது. இவைகளில் 330 குடியிருப்புகளில் உள்ள தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த தகுதியானவை என்று கண்டறியப்பட்டது என்றும், 2013–2014 ல் (GIS) பகுப்பாய்வின் படி தமிழ்நாட்டிலுள்ள 95010 குடியிருப்புகளில் 92136 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளி வசதியுள்ள குடியிருப்புகள் என்றும் 2874 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளி வசதியற்ற குடியிருப்புகள் என்றும் கண்டறியப்பட்டது. இவைகளில் 678 குடியிருப்புகள் தொடக்கப்பள்ளி துவங்க தகுதியான குடியிருப்புகள் என்று கண்டறியப்பட்டது. இதே போல் 93293 குடியிருப்புகள் நடுநிலை பள்ளி வசதி உள்ள குடியிருப்புகள் என்றும் 1717 குடியிருப்புகள் நடுநிலைப்பள்ளி வசதியற்ற குடியிருப்புகள் என்றும் கண்டறியப்பட்டது. இவைகளில் 330 குடியிருப்புகளில் உள்ள தொடக்க பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த தகுதியானவை என்று கண்டறியப்பட்டது என்றும் மேலும், பள்ளி வரைபடம் தயாரித்தல் பணியிலிருந்து மேம்படுத்தப்பட்ட புவியியல்

தகவல் முறைமை தகவல் தளத்தை பயன்படுத்தி கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன:–

1. பெண்கள் கழிப்பிடம், ஆண்கள் கழிப்பிடம், குடிநீர், சுற்றுசுவர் மற்றும் வகுப்பறை வசதிகள் தேவைப்படும் பள்ளிகளின் இடங்கள் கண்டறியப்பட்டு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. "ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்" மேற்கண்ட வசதிகளை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரகம் பள்ளிகளுக்கு வழங்க ஏதுவாக அனுப்பப்பட்டுள்ளது.

2. மாநில அருகாமை விதிகளான தூரம், இயற்கை தடை, மனிதனால் உருவாக்கப்பட்ட தடைகளான, இரயில் வழி, சாலைவழி, ஆற்றுவழி ஆகியவற்றை கருத்தில் கொண்டு முன்மொழியப்பட்ட புதிய தொடக்கப்பள்ளிகள், தரம் உயர்த்தவேண்டிய தொடக்கப்பள்ளிகள், உண்டு உறைவிடப்பள்ளிகள் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகள் வழங்க தகுதியான குடியிருப்புகள் இவைகளின் இடங்கள் புவியியல் தகவல் தளத்தை பயன்படுத்தி வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

3. புவியியல் தகவல் முறைமை வரைபடம் தயாரித்தலில் ஒரு பகுதியாக "புவியியல் தகவல் முறைமையின் பாயன்பாடுகள் மற்றும் செயல்பாடுகள்" என்ற தலைப்பில் அனைவருக்கும் கல்வி இயக்க அலுவலர்களுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி கொடுப்பதற்காக பயிற்சி கட்டகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- புவியியல் தகவல் முறைமைகளின் அடிப்படைகள்
- லேயர்கள் மற்றும் வரைபடங்களை கையாளுதல்
- அடையாளங்கள் மற்றும் குறிப்புகளை உருவாக்குதல்
- அட்டவணைத் தரவிலிருந்து தேவையான இடங்களை காட்சிக்கு வைத்தல்
- இடம் மற்றும் பண்பு சார்ந்த தகவல்களை தொகுத்தல்

இடம் சார்ந்த பகுப்பாய்வின்படி 5 மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்கு 20 நாள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

4. புவியியல் தகவல் முறைமை தகவல் தளத்தை புதுப்பிப்பதற்காக கீழ்க்கண்ட தலைப்புகளில் 2 மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு (அனைத்து மாவட்டங்களும்– மாவட்டத்திற்கு இருவர் வீதம்) பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டிருந்தது.

- கிராமங்கள், குடியிருப்புகள் மற்றும் பள்ளிகள் இவைகளின் தகவல்களை தொகுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- மாவட்டங்களில் புவியியல் தகவல் முறைமை வெளியீடுகளை பயன்படுத்துதல் சார்ந்த பயிற்சி

இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு தேவை, கட்டளை, திரைப்படக்காட்சி ஆகியவற்றை உள்ளடங்கிய பயிற்சி கட்டகம் அனைத்து பங்கேற்பார்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கீழ் இயங்கும் உண்டு உறைவிட பள்ளிகளின் இடங்கள் வரைபடத்தில் குறிக்கப்பட்டு, அப்பள்ளிகளோடு தொடர்புடைய தகவல்கள் புவியியல் தகவல் முறைமை தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்றும், இச்செயல்பாட்டிற்கு முன் உண்டு உறைவிட பள்ளிகள் அமைந்துள்ள இடங்கள் மேற்கண்ட துறைகளின் இயக்குநரகத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது..

XLI. பள்ளிச்செல்லா குழந்தைகளை இணையதள வாயிலாக கண்காணித்தல்

208. பள்ளிச்செல்லா குழந்தைகளை இணையதள வாயிலாக கண்காணித்தல் பணிக்காக 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் 51447 பள்ளிச்செல்லா குழந்தைகளுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்க ரூ.16.88 கோடி நிதி ஒதுக்கீடு கோரியுள்ளதாக குழு அறிகிறது. இத்தொகை பெறப்பட்டதா என்றும், துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும் குழு அறிய விரும்பியது.

209. அரசின் பல்வேறு முயற்சிகளின் காரணமாக பள்ளிச்செல்லா மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதன் அடிப்படையில், 2013–2014 ஆம் ஆண்டில் 5.74 இலட்சத்திலிருந்து 51.447ஆக குறைந்துள்ளது. தற்போது 51447 பள்ளிச்செல்லா குழந்தைகளில் 46,737 குழந்தைகளுக்கு உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையங்கள்/இணைப்பு சிறப்பு பயிற்சி மையங்கள் வாயிலாக கண்டறியப்பட்டது. இக்குழந்தைகளை உண்டு உறைவிட மையம், சிறப்பு பயிற்சி மையம், கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் (NCLP) பள்ளிகள் மற்றும் நேரடி சேர்க்கை மூலமாக பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர் என்றும், சிறப்பு மையங்களில் சேர்க்கப்படும் குழந்தைகள் முதலில் சோதித்தறிந்து சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு தரவாரியாக பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர் என்றும் துறை தெரிவித்தது.

– ஒவ்வொரு வருடம் ஜூன் மாதத்தில் பள்ளி வயதுக் குழந்தைகள் (6 –14) பள்ளியில் சேர்ப்பதற்காக சிறப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தப்படுகிறது.

– இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009–இன்படி கண்டறியப்பட்டு இடைநின்ற மாணவர்களை வயதுக்கேற்ற வகுப்பில் அருகாமையில் உள்ள பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படும் குழந்தைகளுக்கு தேவையின் அடிப்படையில் சிறப்பு பயிற்சி அல்லது உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கலாம்.

– அனைவருக்கும் கல்வி இயக்கக கலப்பணியாளர்கள் மூலம் கிராமசபை கூட்டங்களில் ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளிலும் 100 சதவீதம் சேர்க்கை, பள்ளி செல்லா குழந்தைகள் கண்டுபிடிப்பு மற்றும் தரமான கல்வி வழங்குதல் குறித்து கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

– கிராம அளவில் நுண்ணிய செயல்திட்டம் (Micro Plan) உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்பு பயிற்சி மையத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தத்தெடுக்கப்பட்டு அவர்களது வருகை கண்காணிக்கப்படுகிறது.

இணையதளம் வாயிலாக கண்காணித்தல்

- பள்ளி செல்லா குழந்தைகள் தொடர்ந்து கல்வி பயில்வதை "sstracking.tnschools.gov.in" என்கிற இணையதளம் வாயிலாக கண்காணிக்கப்படுகிறது . இதன் மூலம் ஒவ்வொரு குழந்தை பற்றிய விவரங்களை தனிக் குறியீடு மூலம் வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அறியப்படுகிறது. இதில் மாணவர் விவரம், கண்காணிப்பு, படிவம் போன்ற தகவல்கள் அடங்கியுள்ளன.

- கண்டறியப்பட்ட 51477 இடைநின்ற மாணவர்களுக்கு 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.1688.44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. செலவின விவரம் ரூ.1384.529 இலட்சம் ஆகும் என்று துறை தெரிவித்தது.

XLII. நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு அருகாமையில் உள்ள பள்ளிகளில் தொடக்க நிலையில் சேர்க்கை

210. 2013–2014 ஆம் கல்வியாண்டில் நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு அருகாமையில் உள்ள பள்ளிகளில் தொடக்க நிலையில் சேர்க்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 சதவிகிதம் சேர்க்கையை உறுதிப்படுத்திட எதுவாக படிவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன என துறை தெரிவித்தது. இதனை எத்தனை மாவட்டங்கள் முழுமையாக செயல்படுத்தியுள்ளது என்கின்ற விவரங்களை துறை தெரிவிக்கும். மாணவர் சேர்க்கை குறித்த விவரம் மேலும் இம்முறையை நடைமுறைப்படுத்தி பகுதி நடைமுறை படுத்திய, பள்ளிகள் எத்தனை என்றும், நடைமுறைபடுத்தாத பள்ளிகள் எத்தனை என்று அரசு எடுத்த நடவடிக்கைக்கு குழு அறிய விரும்பியது.

211. 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் இலவச கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் நலிவடைந்த மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கு அரசாணை எண்.60 பள்ளி கல்வி துறை(X2) நாள் 1.4.2013 ல் 25% சேர்க்கையை உறுதிபடுத்த படிவங்கள் அரசால் அளிக்கப்பட்டது என்றும், மாநில அளவில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் கீழ்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு உள்ளது என்றும் துறை தெரிவித்தது.

இயக்ககம்	மொத்த பள்ளிகள்	25% செயல்படுத்திய பள்ளிகளின் எண்ணிக்கை	25%செயல்படுத்தாத பள்ளிகளின் எண்ணிக்கை
மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம்	3557	2605	952
பள்ளிக் கல்வி இயக்ககம்	414	211	136
தொடக்க கல்வி இயக்ககம்	5265	4971	1183

212. 2013–2014 ஆம் ஆண்டில் நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு 25 சதவீத சேர்க்கை தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் 1) கன்னியாகுமரி, 2) தேனி , 3) திண்டுக்கல், 4) நாகப்பட்டினம் தவிர மீதமுள்ள 28 மாவட்டங்களில் 383 தனியார் சுயநிதி பள்ளிகளில் 25 சதவீத ஒதுக்கீட்டின்படி மாணவர் சேர்க்கை அனுமதிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்றும், அருகாமையில் உள்ள பள்ளிகளில் தொடக்க நிலை சேர்க்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 சதவிகித சேர்க்கையின்படி 25230 குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். அனைத்து மாவட்டங்களிலும் 25 சதவிகித மாணவர் சேர்க்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், 43137 மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 49,864 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். வரும் கல்வி ஆண்டில் முழுவீச்சில் நடைமுறைப் படுத்தவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், குழந்தைகளின் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின்படி 25 சதவிகித இடங்களை நிரப்புவதற்கு தமிழக அரசு, பள்ளிக் கல்வி இயக்ககத்தின் சார்பில் ஒருவரை ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக நியமித்திருக்கிறது.

213. குழு ஆய்வு பயணம் மேற்கொண்ட மாவட்டங்களில் மேற்படி திட்டத்தின்படி எந்த ஒரு மாவட்டமும் நிர்ணயித்த சேர்க்கையின் சதவிகிதம் அடைய முடியவில்லை என்கின்ற தகவல் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இதற்கான காரணம் இத்திட்டம் குறித்து பொது மக்களிடம் போதிய விளம்பரம் இல்லை என்று குழு கருதுகிறது. துறை மேற்படி திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்த வகுத்துள்ள யுக்திகள் மற்றும் விதித் தளர்வு குறித்த குழு அறிய விரும்புகிறது.

214. பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டும் மேற்படி சட்டமானது 2013–2014 கல்வியாண்டு முதலே தமிழ்நாட்டில் முதன்முறையாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதால் 40% மாணவர்கள் மட்டுமே சேர்க்கை செய்யப்பட்டனர். 2014–2015ஆம் கல்வியாண்டில் 100% இலக்கினை அடைவதற்கு சார்நிலை அலுவலர்கள் மூலம் உள்ளூர் செய்தித்தாள்கள் துண்டு பிரச்சுரங்கள் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக மக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 25% இட ஒதுக்கீடு வழங்க மறுக்கும் பள்ளிகளின் மீது துறை சார்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரித்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்திற்கு மத்திய அரசுதான் செலவினத்தை ஈடு செய்ய வேண்டும். 2013–2014 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு மாநில அரசே செலவு செய்தது. மாநில அரசு செலவு செய்த பணத்தை மத்திய அரசிடம் கோரியது. எனினும், மேற்படி தொகையினை வழங்க இயலாது என மத்திய அரசு தெரிவித்தது. 2013–2014 ஆம் ஆண்டில் செலவு செய்த பணத்தை மத்திய அரசு ஈடு செய்யாத காரணத்தால் இந்தத் திட்டத்திற்கான 100 சதவிகிதம் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் துறை உள்ளது. 2014–2015 இல் SSA திட்டத்தில் இத்திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. SSA திட்டத்தில் இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு 65 சதவிதமும், மாநில அரசு 35 சதவிகிதமும் கொடுக்க வேண்டும்.

215. வரும் கல்வியாண்டு முதல் 25% இடஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தும் வகையில் துறை நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XLIII. பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு

216. ஸ்மார்ட் கார்டு, குழந்தைகள் பள்ளிவிட்டு வேறு பள்ளி இடம் பெயர்தல் பள்ளியிலிருந்து இடை நிற்றல் குறித்த விவரம், உடல்நலம் மற்றும் இதர தகவலையும் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் ஸ்மார்ட் கார்டு அவசியமாகிறது என துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளதை குழு அறிந்தது. 2013–2014 ஆம் கல்வியாண்டு 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும் ஸ்மார்ட் கார்டு வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் துறை தெரிவித்தது. இப்பணியின் தற்போதைய நிலை என்னவென்றும், எத்தனை மாவட்டங்களில் இப்பணி முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும் குழு அறிய விரும்புகிறது.

217. குழு கோரியதற்கு துறை குழந்தைகள் ஒரு பள்ளியை விட்டு வேறு பள்ளிக்கு இடம் பெயர்தல், பள்ளியில் இருந்து இடைநிற்றல், அரசால் வழங்கப்படும் நலத்திட்டங்களை அறிதல் மாணவர்களின் உடல் நலம் மற்றும் இதர தகவல்களை கண்காணிப்பதற்காக ஒவ்வொரு மாணவருக்கும் ஸ்மார்ட் கார்ட் வழங்குவது அவசியம் என அரசால் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி திருச்சி மாவட்டத்தில் உள்ள 5 அரசு மேல்நிலைப்பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும், இதன் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தினை விரிவு படுத்தவதற்காக அரசுக்கு கருத்துரு

அனுப்பப்பட்டுள்ளது என துறை தெரிவித்துள்ளது. மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளின் புகைப்படத்துடன் கூடிய தனி நபர் விவரங்களை முழுமையாக சர்வரில் உள்ளீடு செய்த பின்னர் இத்திட்டத்திற்கான பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், துறையால் மாணவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டம் மிக முக்கியமான நடவடிக்கை என்பதாலும் இப்பணியினை முழுமையாக முடிக்கப்பெற்ற பின் பள்ளிக்கல்வித் துறை சேவை மேலும் மேன்மை அடையும் என்பதால் இத்திட்டத்தினை இதர மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தினால் பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் நல்ல பயனுள்ளதாக அமையும் என்று குழு தனது கருத்தினை தெரிவித்தது.

218. எனவே துறை மேற்படி திட்டத்தினை இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது

XLIV. கணினி உதவியுடன் கற்பதற்கான மொழி ஆய்வகம் அமைத்தல்

219. கணினி உதவியுடன் கற்பதற்கான மொழி ஆய்வகம் ஒன்று ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நிறுவப்பட உள்ளது என துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளதா என்றும் அவ்வாறு நிறுவப்பட்டிருந்தால் ஆய்வகத்தில் பயிற்சி மேற்கொண்ட கணினி மாணவர்களுக்கு அப்பயிற்சி எவ்வாறு பயனுள்ளதாக உள்ளது. இதற்காக ஏதேனும் ஆய்வினை துறையால் மேற் கொள்ளப்பட்டதா என்றும், இதர மாவட்டங்களில் இம்மாதிரியான ஆய்வகங்கள் அமைக்க துறையிடம் உள்ள கருத்துரு குறித்தும் குழு அறிய விரும்பியது.

220. குழு கோரியதற்கு, துறை ஒவ்வொரு அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் செயல்படும் கணினி ஆய்வகங்களை பயன்படுத்தி ஆங்கில மொழி ஆய்வகங்கள் அமைப்பதற்கு பதிலாக வருவாய் மாவட்ட அளவில் அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த ஆங்கில மொழி ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைத்திட திட்டமிடப்பட்டு அரசின் அனுமதி பெற்று முன்னோடி திட்டமாக திருச்சி மாவட்டம் சோமரசன்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் முதல் கட்டமாக 2013–2014 ஆம் ஆண்டில் ஒரு ஒருங்கிணைந்த ஆங்கிலம் மொழி ஆய்வக மையம் மற்றும் பயிற்சி மையம் நிறுவப்பட்டது.

221. ஆங்கில மொழி ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள பள்ளிகள் அளவில் செயல்படும் ஆய்வகங்களால் மாணவர்களுக்கு ஒரே மாதிரியான பயிற்சிகளையும், அப்பள்ளி ஆசிரியர்களின் திறன் அடிப்படையில் தற்சமயம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வளர்ந்து வரும் கல்விச் சூழலுக்கேற்ப மேம்படுத்தப்பட்ட ஆங்கில மொழி அறிவினை வழங்க வேண்டியது அவசியமாகிறது. ஆகையால் வருவாய் மாவட்ட அளவில் ஒரு ஒருங்கிணைந்த ஆங்கில மொழி ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அவசியம் என கருதப்படுகிறது.

222. மேலும், ஒரு ஒருங்கிணைந்த ஆங்கில மொழி ஆய்வகம் மற்றும் பயிற்சி மையத்தின் மூலம் திருச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளின் மாணவர்களுக்கும் திறன் வாய்ந்த ஆங்கில மொழி ஆசிரியர்கள் மற்றும் போராசிரியர்களை கொண்டு ஆசிரியர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் பயிற்சிகளை வழங்கவும் மேம்படுத்தப்பட்ட ஆங்கில பாட சிறப்பு வகுப்புகளை குறுந்தகடுகளில் பதிவு செய்து மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கலாம்.

223. இத்திட்டம் 2013–2014 ஆம் ஆண்டில் முழுமையான அளவில் நிறைவேற்றப்பட்டு இவ்வாய்வகத்தினை பயன்படுத்தி மாணவர்களிடம் உள்ள ஆங்கில மொழி பயற்சி மேம்படுத்திட அவர்களின் திறமைக்கேற்பவும் மாணாக்கர்களின் புரிதலுக்கேற்பவும் பயிற்சி அளிக்க " Call soft " என்கிற மென்பொருள் நிறுவப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அனைத்து மாணாக்கர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

224. மேலும், இத்திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு மாணாக்கரிடமும் ஆசிரியர்களிடமும் நேரிடையாக தனிக்கவனம் செலுத்தி கலந்துரையாடல் செய்ய வழி வகை செய்கிறது. இதனால் மாணாக்கர்களின் ஆங்கிலமொழி சார்பான மொழித் திறன் மேம்பட்டுள்ளது.

225. இதன் மூலமாக ஆங்கில இலக்கணப் பிழை எதுவும் வராமல் எழுதவும் பேசவும் வழிவகை செய்ய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே இத்திட்டம் முன்னோடி திட்டமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம் சோமரசன்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் நிறுவப்பட்டுள்ளது. அரசிடம் இருந்து மேற்படி திட்டம் சார்பாக பிற மாவட்டங்களில் விரிவாக்கம் செய்திட அரசு நிதி ஒதுக்கீடு பெறும் நிலையில் இத்திட்டம் பிற மாவட்டங்களில் படிப்படியாக நடை முறைபடுத்தப்படும்.

226. இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி துறை தெரிவித்தது போல் இத்திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XLV. குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்ட மாவட்டங்களில் நடைபெறும் பணிகள்

227. 2012–2013 ஆம் ஆண்டில் தேனி மாவட்டம் பெரிய குளம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறிவுசார் பள்ளி அமைக்கும் பணி குறித்து குழு அறிய விரும்பியது.

228. அதற்கு துறை அறிவுசார் பள்ளி அமைக்க தேனி மாவட்டம் பெரியகுளம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், அப்பணிக்கு அரசின் அனுமதி மற்றும் நிதி பெறப்பட்டவுடன் அதன் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படும் என துறை தெரிவித்தது.

229. துறை மேற்படி பணிக்கான அனுமதி மற்றும் நிதி பெறுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

230. 2012–2013 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் பழனி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறிவுசார் பள்ளி அமைக்கும் பணி குறித்து குழு அறிய விரும்பியது.

231. அதற்கு துறை அறிவுசார் பள்ளி அமைக்க திண்டுக்கல் மாவட்டம் பழனி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியினை தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், அப்பணிக்கு அரசின் அனுமதி மற்றும் நிதி பெறப்பட்டவுடன் அதன் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படும் என துறை தெரிவித்தது.

232. துறை மேற்படி பணிக்கான அனுமதி மற்றும் நிதி பெறுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

233. காஞ்சிபுரம் மாவட்டம் நபார்டு –12ன் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட பள்ளிகளுக்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதா என குழு அறிய விரும்பியது.

234. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 5 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது என்று துறை தெரிவித்தது.

235. துறையிடம் பரிசீலனை உள்ள கருத்துருவிற்கு அனுமதி அளித்து பணிகளை விரைவில் துவக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

236. குழு சிவகங்கை மாவட்டத்தில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது, 2013–2014 ஆம் ஆண்டில் பகுதி - II திட்டத்தில் நபார்டு திட்டம் XII -ன் கீழ் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு, சிலுக்கம்பட்டி, முனைவென்றி, கொல்லங்குடி, முத்துப்பட்டணம் மற்றும் மாங்குடி ஆகிய பள்ளிகள் பரிந்துரை செய்யப்பட்டு இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குழு அறிந்தது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

237. சிவகங்கை மாவட்டத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கான சிலுக்கம்பட்டி, முனைவென்றி மற்றும் முத்துப்பட்டணம் (பெண்கள்) ஆகிய மூன்று பள்ளிகள் நபார்டு வங்கி திட்டம் பகுதி XII ல் அரசின் பரிசீலனையில் உள்ளது என துறை தெரிவித்தது.

238. குழு மேற்படி திட்டங்களுக்கான நிதியினை பெற்று பணிகளை விரைவில் துவக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

சென்னை 600 009
நாள்: 04.08.2014
ஆடி 19,
திருவள்ளுவர் ஆண்டு – 2045

அ. பாப்பாசுந்தரம்
தலைவர்
மதிப்பீட்டுக் குழு

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பாகம்–2

நிகழ்ச்சி பகுதி

2013 ஜூன் 4, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 4 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை–1ல் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு.வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி. கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, 2013–2014 ஆம் ஆண்டு எந்தெந்த துறைகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என விவாதிக்க கூடியது.

பின்னர், குழு கீழ்க்கண்ட துறைகளின் மதிப்பீடுகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதென முடிவு செய்தது :

1. பள்ளிக் கல்வித் துறை
2. சுற்றுலா (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)
3. சமூக நலன் (மாற்றுத் திறனாளிகள் நலன் தவிர) (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை)
4. கால்நடை மற்றும் பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை)

இதைத் தொடர்ந்து குழு தேர்வு செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் குறித்து ஆய்வு செய்ய மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்தது.

2013 ஜூலை 3, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாள், புதன்கிழமை காலை 10.00 மணியளவில், தேனி மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, தேனி மாவட்டத்தில் கண்டமனூர் அரசு மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டது. அப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டுமென்றும், பள்ளிக்கு வரும் வழியில் தார்சாலை அமைக்கப்பட வேண்டுமென்றும் பள்ளித் தலைமை ஆசிரியர், குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

பின்னர் குழு, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, தேக்கடி சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 4, வியாழக்கிழமை

குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், தேக்கடியில் உள்ள தனியார் விருந்தினர் மாளிகையில் கூடியது.

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக்

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுபிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, தேக்கடிக்கு செல்லும் வழியில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட மதிப்பீடுகள் தொடர்பான இதர பணிகளை பார்வையிட்டது.

குழு, கொடைக்கானல் சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 5, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ஆம் நாள், வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணியளவில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. அர. சக்கரபாணி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, கொடைக்கானலில் புனித சுசையப்பர் உயர்நிலைப்பள்ளியை பார்வையிட்டது. அந்த பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமென்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் சார்பாக குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

பின்னர் குழு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு திண்டுக்கலில் கலைந்தது.

2013 ஆகஸ்ட் 19, திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் இல்லக் குடியிருப்பு உபவசதி கட்டிடத்திலுள்ள குழு கூட்ட அறை எண்–1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலகப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, சென்னை சைதாப்பேட்டையில் அமைந்துள்ள அரசு மாதிரி பள்ளியை பார்வையிட்டது. மேட்ரோ பணிகளுக்காக பிரதான கட்டிடம் இடிக்கப்பட்டுள்ளதால் அதற்கு மாற்றாக ஆய்வகங்கள் கட்டிக் கொள்ள ரூ. 1,27,000 இலட்சங்களை மேட்ரோ இரயில் திட்டம் வழங்கியுள்ளது என்றும் இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குழு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு சென்னையில் இரவு தங்கியது.

2013 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம் சட்டமன்ற உறுப்பினர் இல்ல குடியிருப்பு உபவசதி கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1 இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் .. செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் .. இணைச் செயலாளர்
திரு. க. பூபதி .. துணைச் செயலாளர்

குழு, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள மணலி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை பார்வையிட்டது. இப்பள்ளியின் பராமரிப்பு பணிக்களுக்காக ரூ.2,00,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

குழு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரம் சென்று இரவு தங்கியது.

2013 ஆகஸ்டு 21, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட், திங்கள் 21 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.00 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்திலுள்ள தனியார் சுற்றுலா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டது. அப்பள்ளியில் 10 கழிவறைகள் 3 ஆய்வகங்கள் 1 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் 5 வகுப்பறைகள் தேவை என்பதை தலைமை ஆசிரியர் குழுவிடம் கோரிக்கை வைத்தார்.

குழு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரத்தில் கலைந்தது.

2013 செப்டம்பர் 19, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், விருதுநகர் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜான் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, விருதுநகர் மாவட்டம் மீசலூர் அரசு மேல்நிலைப் பள்ளியை பார்வையிட்டது. அப்பள்ளியின் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு ஆய்வகம் குடிநீர் வசதி மற்றும் சுற்று சுவர் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

குழு, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, அன்று இரவு குற்றாலத்திற்கு சென்று தங்கியது.

2013 செப்டம்பர் 20, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், குற்றாலத்திலுள்ள பொதுப்பணித்துறை அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருநெல்வேலியில் உள்ள ஆயக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டது. அம்மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு நபார்டு திட்டத்தின் மூலம் கட்டட நிதி ஒதுக்கப்பட்டதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

குழு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு திருநெல்வேலியில் கலைந்தது.

2013 நவம்பர் 5, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில், இராமேஸ்வரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதியில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, இராமேஸ்வரத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டது. அந்த பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு முதலில் ரூ. 1.45 கோடி அனுமதிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி எடுக்க யாரும் முன் வராததால் கட்டடம் கட்டப்படாமல் உள்ளது என குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

குழு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கை சென்று இரவு தங்கியது.

2013 நவம்பர் 6, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.30 மணியளவில், சிவகங்கை வேலுநாச்சியார் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, சிவகங்கை மாவட்டத்திலுள்ள மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப் பள்ளியை பார்வையிட்டது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் மாற்றுத்திறனாளின் மையத்தையும் பார்வையிட்டது.

குழு, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கையில் கலைந்தது.

2014 ஜூன் 26, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் வேலூர் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, வேலூர் மாவட்டத்திலுள்ள ஆற்காடு அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டது. அப்பள்ளியில் பயிலும் 2600 பள்ளி மாணவிகளுக்கு 60 வகுப்பறைகள் தேவைப்படுவதாகவும் தற்போது 40 வகுப்பறைகளே உள்ளதாகவும் கூடுதலாக 20 வகுப்பறைகள் தேவைப்படும் என குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

குழு, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள குழு கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு திருவண்ணாமலை சென்று இரவு தங்கியது.

2014, ஜூன் 27 வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள்,வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் திருவண்ணாமலை அரசினர் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருவண்ணாலை மாவட்டத்தில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, திருவண்ணாமலையில் கலைந்தது.

2014 ஜூலை 3, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2014 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 3ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு உபவசதிக் கட்டடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. கு. குணசேகரன்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர். எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. கு. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட" பள்ளிக்கல்வி " மதிப்பீடு தொடர்பாக பள்ளிக் கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், மாநில திட்ட இயக்குநர் மற்றும் இதர துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2014, ஆகஸ்ட் 4 திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாள் திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சென்னை–9 , சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்திலுள்ள குழுக் கூட்ட அறையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்.

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு.ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ்.ஆர். பார்த்திபன்

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. இரா. பழனிசாமி . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, "பள்ளிக் கல்வி" குறித்த வரைவு அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. வரைவு அறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது. குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அறிக்கையை குழுவின் சார்பில் கையொப்பமிட்டு பேரவைக்கு அளிக்க குழுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

இணைப்பு - I

வ. எண்	மாவட்டம்	ஒன்றியம்	உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும் பள்ளி
1	காஞ்சிபுரம்	குன்றத்தூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொளப்பாக்கம்.
2	காஞ்சிபுரம்	இலத்தூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நீலமங்கலம்
3	திருவள்ளூர்	வில்லிவாக்கம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கரலப்பாக்கம்.
4	திருவள்ளூர்	கடம்பத்தூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாப்பரம்பாக்கம்.
5	விழுப்புரம்	கள்ளக்குறிச்சி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அனைக்கரைக் கோட்டாலம்.
6	விழுப்புரம்	சங்கராபுரம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஊராங்காணி.
7	விழுப்புரம்	மரக்காணம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முள்ளூர்.
8	கடலூர்	குறிஞ்சிப்பாடி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குள்ளியமல்லூர்
9	வேலூர்	ஜோலார்பேட்டை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நெற்குந்தி
10	திருவண்ணாமலை	செய்யாறு	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாராசூர்.
11	தர்மபுரி	நல்லம்பள்ளி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாலஜங்கமுண அள்ளி.
12	தர்மபுரி	மொரப்பூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முத்தானூர்.
13	கிருஷ்ணகிரி	பருகூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குட்டூர்.
14	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கட்டிகானப்பள்ளி.
15	சேலம்	ஆத்தூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உமையாள்புரம்.
16	சேலம்	சங்ககிரி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கீரைப்பாப்பம்பாடி.
17	நாமக்கல்	நாமகிரிப்பேட்டை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சிங்கிலியன்கோம்பை.
18	ஈரோடு	பெருந்துறை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சிங்காநல்லூர்
19	கோயமுத்தூர்	பேரூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பேரூர், சுகுணாபுரப்.
20	கோயமுத்தூர்	மதுக்கரை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மயிலேரிபாளையம்.

21	நீலகிரி	கோத்தகிரி'	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சோலூர்.
22	திருப்பூர்	தாராபுரம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மணக்கடவு.
23	திருச்சி	அந்தநல்லூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, போசம்பட்டி.
24	திருச்சி	மணப்பாறை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கரும்புளிப்பட்டி.
25	திருச்சி	முசிறி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கரிகாலி
26	பெரம்பலூர்	பெரம்பலூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வடக்குமாதேவி.
27	அரியலூர்	அரியலூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தேளூர்.
28	கரூர்	கரூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கோட்டைமேடு.
29	புதுக்கோட்டை	கந்தவர்க்கோட்டை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, துவார்.
30	புதுக்கோட்டை	அன்னவாசல்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, புல்வயல்.
31	தஞ்சாவூர்	போராவூரணி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சொர்ணாகாடு.
32	தஞ்சாவூர்	திருவோணம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, காரியவிடுதி.
33	திருவாரூர்	நன்னிலம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சித்தனவாழூர்.
34	நாகப்பட்டினம்	செம்பனார்கோயில்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பெருமாள்பேட்டை.
35	மதுரை	திருப்பரங்குன்றம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தோப்பூர்.
36	மதுரை	மதுரை கிழக்கு	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ராஜாக்கூர்.
37	திண்டுக்கல்	நத்தம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உலுப்பக்குடி.
38	திண்டுக்கல்	நத்தம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கோட்டைப்பட்டி.
39	தேனி	போடிநாயக்கனூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, லட்சுமிபுரம்.
40	தேனி	பெரியகுளம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மஞ்சளாறு அணை.
41	தேனி	பெரியகுளம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சருத்துப்பட்டி.
42	சிவகங்கை	சாக்கோட்டை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பொய்யாவயல்.

43	சிவகங்கை	சாக்கோட்டை	இராம.க.இராமநாதன் செட்டியார் நகராட்சி நடுநிலைப்பள்ளி, சுப்ரமணியபுரம், காரைக்குடி –2.
44	இராமநாதபுரம்	பரமக்குடி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கமுதகுடி.
45	விருதுநகர்	சிவகாசி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மடுதுப்பட்டி.
46	விருதுநகர்	சாத்தூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கே.மேட்டுப்பட்டி.
47	தூத்துக்குடி	தூத்துக்குடி (ஊரகம்)	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பொட்டல்காடு.
48	தூத்துக்குடி	சாத்தான்குளம்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பன்னம்பாறை.
49	திருநெல்வேலி	தென்காசி	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பலபத்திராமபுரம்.
50	திருநெல்வேலி	மேலநீலிதநல்லூர்	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வென்றிலிங்கபுரம்.

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 12/3/13

இணைப்பு - 2

2013 –2014 – நூலக வரி வசூல் மற்றும் நிலுவை விவரம்

(இலட்சத்தில்)

வ. எண்	மாவட்டம்	2012–2013–ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள நூலக வரி	2013–2014–ஆம் ஆண்டு நூலக வரி கேட்பு	மொத்தம் கலம் (3+4)	04/2013 முதல் 03/2014 வரை நூலக வரி (12 மாத) வசூல்	வசூல் செய்யப்பட வேண்டிய நிலுவை கலம் (5 – 6)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	அரியலூர்	14.91	32.07	46.98	23.72	23.26
2	சென்னை	537.23	1200.00	1737.23	1408.17	329.07
3	கோயம்புத்தூர்	2203.10	1556.27	3759.37	877.77	2881.60
4	கடலூர்	37.86	176.15	214.01	150.52	63.49
5	தருமபுரி	16.78	40.39	57.17	43.82	13.35
6	திண்டுக்கல்	116.75	118.27	235.02	160.43	74.59
7	ஈரோடு	205.10	468.83	673.93	278.38	395.56
8	காஞ்சிபுரம்	1545.85	941.65	2487.50	750.68	1736.82
9	கன்னியாகுமரி	275.68	145.18	420.86	250.68	170.18
10	கரூர்	91.44	113.00	204.44	174.20	30.24
11	கிருஷ்ணகிரி	100.39	93.06	193.45	105.06	88.38
12	மதுரை	1009.02	167.70	1176.72	276.45	900.27
13	நாகப்பட்டினம்	83.60	51.58	135.17	95.13	40.05
14	நாமக்கல்	74.86	109.15	184.02	108.21	75.81
15	நீலகிரி	135.60	145.90	281.50	139.01	142.49
16	பெரம்பலூர்	17.67	41.53	59.20	40.25	18.95
17	புதுக்கோட்டை	83.44	77.60	161.04	47.40	113.64
18	இராமநாதபுரம்	21.09	66.00	87.09	64.75	22.34
19	சேலம்	617.27	298.49	823.93	241.85	582.08
20	சிவகங்கை	58.73	109.14	167.86	116.33	51.53

வ. எண்	மாவட்டம்	2012–2013–ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள நூலக வரி	2013–2014–ஆம் ஆண்டு நூலக வரி கேட்பு	மொத்தம் கலம் (3+4)	04/2013 முதல் 03/2014 வரை நூலக வரி (12 மாத) வசூல்	வசூல் செய்யப்பட வேண்டிய நிலுவை கலம் (5 – 6)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
21	தஞ்சாவூர்	441.96	178.50	620.46	134.72	485.74
22	தேனி	190.67	141.68	332.36	109.98	222.38
23	திருச்சிராப்பள்ளி	313.73	308.85	622.58	325.62	296.96
24	திருநெல்வேலி	325.34	261.02	586.36	338.10	248.26
25	திருப்பூர்	60.14	500.00	560.14	212.20	347.94
26	திருவள்ளூர்	564.27	682.64	1246.91	656.88	590.03
27	திருவண்ணாமலை	112.90	100.94	213.84	75.26	138.58
28	திருவாரூர்	56.69	85.75	142.44	70.17	72.28
29	தூத்துக்குடி	506.93	167.63	674.56	121.96	552.59
30	வேலூர்	466.64	244.49	711.13	246.63	464.50
31	விழுப்புரம்	435.95	179.81	615.76	72.01	543.75
32	விருதுநகர்	76.77	230.00	306.77	243.00	63.77
மொத்தம்		**10798.38**	**9033.27**	**19739.83**	**7959.36**	**11780.46**

பரிந்துரைகளின் சுருக்கம்

1. துறை நூறு விழுக்காடு என்கிற இலக்கினை அடைய தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.6)

2. பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி துவங்கப்பட்ட திட்டம் என்பதால் துறை உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு பதிவு செய்யப்படும் விவரங்களை அவ்வப்போது கண்காணித்து உரிய மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.14).

3. துறை உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து, மேல்நிலைப் பள்ளிகளுக்குச் செல்லும்போது மாணவர்களுடைய சேர்க்கை குறித்த விவரங்களை அறிக்கையாக அனுப்பிவைக்கப் பெறவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.18).

4. உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையினை விரைவில் பெற்று அதன் தொடர்பான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற பேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.56).

5. நடைபெற்று வரும் பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற்று பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.66).

6. நடமாடும் ஆலோசனை மையங்களுக்கான செலவினம் குறித்து துறையின் அரசாணையில் தெரிவித்தவாறு வெளியிடப்பட்ட நெறிமுறைகளின் நகல் ஒன்று குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. மேலும், கூடுதலாக 5 மண்டலங்களின் கீழ் இணைக்கப்பட்ட மாவட்டங்களின் விவரங்களையும் குழுவிற்கு அனுப்பி வைக்கவும் குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.71).

.

7. துறை தெரிவித்தது போல் மாணவர்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் ஆங்கில மொழி அறிவினை மேம்படுத்தும் கூறுகளையும் அடங்கிய பயிற்சித்தாள்களை வழங்கி ஆய்வினை மேற்கொண்டு அதனை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.75).

8. துறையால் அளிக்கப்பட்ட தகவல் குழுவால் ஏற்றத்தக்க வகையில் இல்லை. எனவே, துறை இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது (பத்தி எண்.78)

9. துறை, மேற்படி பணியினை முடிப்பதற்கு ஒரு கால வரையரையினை நிர்ணயித்து அதற்கான பணியினை முடிக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. மேலும் இது குறித்து அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.81)

10. எனவே, துறை சிறப்பு ஊக்கத் தொகையினை வழங்குவதோடு, வேலூர் மாவட்டத்தில் ஏன் பயனாளிகள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என ஆய்வினையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.89)

11. எனவே, இது குறித்து துறையால் உரிய முறையில் ஆய்வினை மேற்கொள்ளப்பட்டு அதன் விவரத்தினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.99)

12. குறுந்தகடு வழங்கப்பட்ட பின்னர் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.102)

13. மாணவர்களின் பாதுகாப்பு கருதி பள்ளி நேரங்களில் ஆய்வு மேற்கொண்டு பள்ளிச் செல்லும் மாணவர்களுக்கு சிறப்பு பேருந்துகளை இயக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.111)

14. எனவே, துறை ரீதியான ஆய்வினை மேற்கொண்டு அதனை அறிக்கையாக குழுவிற்று அனுப்பி வைக்குமாறு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.121)

15. குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினை, துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்கிற விவரத்தினையும், குழு அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையில் துறையால் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை குறித்தும், குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. குழுவால் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இடம் பெற்றுள்ள பரிந்துரைகளின் சுருக்கத்தினையும் அறிக்கையாக அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.125)

16. இத்தகைய துறை ரீதியான நடவடிக்கையினை தற்போது மேற்கொள்ளப்படுகிறதா என்றும், அவ்வாறு மேற்கொள்ளாத நேர்வில் இதனை குழுவின் கருத்து என கருதி துறை பரிசீலிக்கலாம் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. இதன் தொடர்பாக துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.130)

17. துறை தெரிவித்தது போல், சுயநிதி, தனியார் பள்ளிகளில் நீச்சல் குளம் அமைத்தலுக்கான ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கையினை ஒரு வரையறையினை நிர்ணயித்து அப்பணியினை முடிக்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. ஒழுங்குபடுத்துதல் பணியினை மேற்கொண்ட பிறகு அதனை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.133)

18. துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இத்திட்டத்தினை இதர மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.136)

19. துறை மேற்படி திட்டத்திற்கான நிதி செலவினம் குறித்தும் மற்றும் அதன் தொடர் நடவடிக்கை குறித்தும் குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.164)

20. எனவே, இது தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.167)

21. துறையின் அரசு முதன்மைச் செயலார் அவர்களின் கருத்திற்கு குழு அரசு ஏற்று நடத்தினால்தான் இதற்கு ஒரு நல்ல தீர்வாக இருக்கும் என தெரிவித்தது. மாணவர்களின் கல்வியினை கருத்தில் கொண்டு அரசு உதவி பெறும் பள்ளிகளில் துறை ரீதியான ஆய்வினை மேற்கொண்டு நிருவாகத்தில் பிரச்சனைகள் உள்ள பள்ளிகளை அரசே ஏற்று நடத்தப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.184)

22. மாணவர்கள் தமது கல்வியினை நல்ல முறையில் மேற்கொள்வதற்காக அரசினால் இலவச பயண அட்டை வழங்கப்படுகிறது என்பதனை கிராமங்களில் உரிய விளம்பரம் செய்யப்பட வேண்டுமென்பதை குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.187)

23. சுற்றுலா பயணிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி உரிய பேரூந்து வசதியினை ஏற்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.190)

24. துறை மத்திய அரசுக்கு அனுப்பிவைக்க கருத்துருவிற்கு விரைவில் ஒப்புதல் பெற்று பயனாளிகளுக்கு உதவி தொகையினை வழங்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.198)

25. மாணவர்களின் நலன் கருதி அவர்களின் படிப்பாற்றலை மேம்படுத்தும் வகையில் அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியினை ஏற்படுத்த துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.201)

26. எனவே துறை மேற்படி திட்டத்தினை இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.218)

27. இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி துறை தெரிவித்தது போல் இத்திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 226)

28. துறை மேற்படி பணிக்கான அனுமதி மற்றும் நிதி பெறுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.229)

29. துறை மேற்படி பணிக்கான அனுமதி மற்றும் நிதி பெறுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.232)

30. துறையிடம் பரிசீலனை உள்ள கருத்துருவிற்கு அனுமதி அளித்து பணிகளை விரைவில் துவக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.235)

31. குழு மேற்படி திட்டங்களுக்கான நிதியினை பெற்று பணிகளை விரைவில் துவக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.238)

****

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

04.06.2013	சென்னை
03.07.2013	தேனி
04.07.2013	திண்டுக்கல்
05.07.2013	திண்டுக்கல்
19.08.2013	சென்னை
20.08.2013	திருவள்ளூர்
21.08.2013	காஞ்சிபுரம்
19.09.2013	விருதுநகர்
20.09.2013	திருநெல்வேலி
05.11.2013	இராமநாதபுரம்
06.11.2013	சிவகங்கை
26.06.2014	வேலூர்
27.06.2014	திருவண்ணாமலை
3.7.2014	சென்னை
4.8.2014	சென்னை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS